FEB. 52

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

108
OFFICE OF THE ...
27 MAR 1952

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இப்போது 9300 பேருக்குமேல் இதில் நிரந்தர அங்கத்தினராக இருக்கிறார்கள். இமயம் முதல் குமரிவரையிலும் இன்னும் இலங்கை, மலேயா, முதலிய வெளிநாடுகளிலிருந்துங்கூட பல அங்கத்தினர்கள் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

உங்களுக்கு இதில் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுது கூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஆனால் தலைக்கு மூன்று கூபன் வீதம் தான் அனுப்பவேண்டும். அவ்வப்போது கண்ணனில் போட்டிகள் வெளியாகின்றன. இவற்றில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

பம்பாயிலிருந்து பாட்ஜுகள் வந்துவிட்டன. இதுவரை பாட்ஜு பெறாத புது அங்கத்தினர்களுக்கு இப்பொழுது அனுப்பப்பட்டு வருகிறது.

வெளிவந்து விட்டதே!

நீங்கள் வாங்கியாச்சா?
மிட்டாய் வெளியீடு

ராஜன், நாவுக்கரசு, தங்கமணி
முதலியோரின் அற்புதக் கதைப் புத்தகங்கள்!

●

1. கரும்புத் தோட்டம்
2. சிட்டுக் குருவி
3. பருத்தியூர்பங்கஜம்
4. விடாதே பிடி!
5. சுட்டுத் தள்ளு!
6. டுமீல்!
7. சின்ன ராஜா
8. சிரிக்காதே!

●

விலை ஒவ்வொன்றும் ஒரு அணா. எல்லா ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். தபாலில் பெற 0-8-9 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

●

விவரங்களுக்கு:

ஜில் ஜில் பதிப்பகம்

தபாற் பெட்டி 1793, சென்னை-1.

கண்ணன்

மலர்: 3 இதழ்: 2

பொருளடக்கம்

குழந்தைகளே! .. .. பக்கம் 2
ஜம்பு - 'ஆர்வி' 3
குளிகைத் தீவு - சித்திரக் கதை .. 9
பேனுத் திருடன் - என். எஸ். ஸ்ரீ... 13
இயற்கை விநோதங்கள்-சுந்தரராமன் 18
புள்ளிமான் - பூவண்ணன் 20
கதையின் முடிவு - மணி 21
நகைப் பெட்டி - 'ராஜன்' 22
கண்ணன் கழக அங்கத்தினர்கள் .. 27
பூனை - எலி விளையாட்டு-'எல்கே'.. 29
எண்ணிலே படங்கள் - 'மூட்டை' .. 30
விச்சுவின் குறும்பு - 'எனெஸ்' .. 31
வரதனின் டைரி-ஆர்.வி.எஸ்.மணி .. 36
பாவம், பாட்டி !-எஸ். ரங்கநாயகி.. 37
பொழுது போக்கு - ரு. துளசிதாஸ்.. 42
எங்கள் ஊர்-பாலசுப்பிரமணியன்.. 43
ரேடியோ - புரொபஸர் விஞ்ஞானம் 45
நீச்சல் பழக்கம்-'டிமான்ஸ்டிரேட்டர்' 49
கேட்டீர்களா! 52
கண்ணன் தபால் 53

வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், மஞ்சரி, கண்ணன்
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

உங்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துக்கள். முதன் முதலில் இந்தியா குடியரசாக ஆன தினத்தன்று தான் கண்ணனும் தோன்றினன்.

இந்த இரண்டு ஆண்டுகளாக நீங்கள் கண்ணனுக்குக் காட்டி வரும் ஆதரவைக் கண்டு நாங்கள் பூரிப்படைகிறோம். பெரியோரின் சரித்திரங்கள், பறவைகள் பிராணிகளின் வாழ்க்கை வரலாறுகள், தொடர்கதைகள், கட்டுரைகள், நாடோடிக் கற்பனைக் கதைகள், விளையாட்டுக்கள், பல் நாட்டுச் சிறுவர்களின் வாழ்க்கை இவற்றையெல்லாம் கண்ணன் தாங்கி வெளிவந்திருக்கிறது. இரண்டு தீபாவளி மலர்களும் ஒரு குடியரசு மலரும், எட்டுப் போட்டிகளும் தயாரித்துக் கொடுத்து நடத்தியிருக்கிறது. பதினாயிரம் குழந்தைகளுக்குமேல் அங்கத்தினராகக் கொண்ட ஒரு கழகத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. பல இடங்களில் ஆயிரக் கணக்கான குழந்தைகளைக் கூட்டி, சிற்றுண்டியுடன் கூட்டங்கள் நடத்தியிருக்கிறது.

இந்தக் குடியரசு வாழ்த்துக்களுடன் உங்களுக்கு மேலும் இதே போன்ற பலவற்றைச் செய்ய உறுதிகொண்டிருப்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். பல புதிய அம்சங்களைச் சேர்த்து, புதிய பகுதிகளை ஆரம்பித்து உங்களுடைய திருப்திக்குப் பூரண பாத்திரமாகக் கண்ணன் விளங்குவான் என்பது நிச்சயம். உங்களுடைய பச்சிளம் மனசிலே தவறான விஷயங்கள் பதியாமலிருக்கப் போதிய கவனம் செலுத்தி ஒவ்வொன்றையும் சர்வ ஜாக்கிரதையாக வெளியிடுவோம். உங்களுக்கு வேண்டியதெல்லாம் என்ன? நல்ல பொழுதுபோக்கு, தேகத்துக்குப் பயிற்சி, மனசுக்கு உற்சாகம், அறிவு விரிவடையச் செய்யும் ஆர்வம் - இவைகள்தானே முக்கியம்? இவைகளைக் கண்டிப்பாகக் கண்ணனில் நீங்கள் எதிர்பார்க்கலாம். தீரமூட்டும் வரலாறுகளும் உங்கள் கற்பனையுள்ளத்தைக் கவர்ந்து விரிவாக்கும் நல்ல கதைகளும் சிந்தையைத் தூண்டும் கட்டுரைகளும் புத்தியை நேர் வழியில் செலுத்தும் நல்ல வேடிக்கை விளையாட்டுக்களும் கண்ணனில் அமோகமாக நிறைந்திருக்கும்.

கண்ணன் உங்களுடைய சொந்தப் பத்திரிகையானதால் நீங்கள் சிறிதும் சங்கோசமின்றி உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடலாம். உங்களுக்காகவேதான் இருக்கிறது கண்ணன் தபால் பகுதி. உங்கள் கருத்துக்களை இந்தப் பகுதியில் சொல்லலாம். உங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். விருப்பமானவற்றை எழுதலாம். குழந்தைகள் பக்கம் என்றே ஒரு பகுதி வெளியிட எண்ணுகிறேன். அதில் நீங்கள் எழுதுவதுமட்டுமே இடம்பெறும்.

சரி; உள்ளே பிரித்துப் பாருங்கள்; படியுங்கள். உங்களுக்கு எது பிடிக்கிறதோ அதைப் பற்றி எழுதுங்கள். எது பிடிக்கவில்லையோ அதைப் பற்றியும் ஒளிவு, மறைவின்றி எழுதுங்கள். இந்த இதழில் நீச்சல் பயிற்சி ஆரம்பமாகிறது. நீங்கள் இந்தப் பயிற்சியைக் கற்றுக்கொள்ள விரும்பினால் உங்களுடைய பெற்றோர்களின் உதவியின்றிப் போகக்கூடாது. ஞாபகத்தில் இருக்கட்டும்! ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

ஜம்பு

ஆர்வி

2

'நீல மாளிகை' ஆரம்பமாகி விட்டது. ஆரம்பமே விறு விறுப்பாக இருந்தது. எடுத்ததுமே சிரிப்பும் கொம்மாளமுமாக ரகளைப் பட்டது. ஆனால் ஜம்புவுக்குப் படம் ஆரம்பமானதோ, ஓடுவதோ ஒன்றும் மனசில் பதியவேயில்லை. லீடர் விசுவமும் நடராஜனும்கூட படத்தில் லயித்துவிட்டார்கள். ஜம்புவையும், "இதைப் பாரடா! அதைப் பாரடா!" என்று சீண்டிச் சீண்டிக் கொம்மாளமடித்தார்கள். ஜம்பு கவலையை மறந்து படம் பார்க்க ஆனவரையிலும் முயன்றான். முடிந்தால்தானே?

அவனுடைய ஞாபகமெல்லாம் அந்தக் கடிதத்தின் மேலேயே இருந்தது. ஆயிரம், ஐந்நூறு தொலைந்திருந்தால்கூட அவன் இவ்வளவு மனவேதனைப்பட்டிருக்க மாட்டான். அந்தக் கடிதம் அவ்வளவு முக்கியமானதாகப் பட்டது. கெட்டுப்போனதனால் அது இன்னும் முக்கியமானதாகப் பட்டது. முக்கியமானதாக இல்லாவிட்டால் அது ஏன் தொலைந்து போகிறது?

இத்தனைக்கும் அவன் வெகு ஜாக்கிரதையாகத்தான் இருந்தான். 'க்யூ' வரிசைக்கு முன்னால் நுழையும்போது பெரியவர்கள், "டேய், டேய்!" என்று அதட்டினார்கள். ஆனால் ஜம்பு ஒன்றையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. யாரோ கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்கள். அப்பொழுதும் ஜம்பு தடுத்தவரைத் திருப்பிக்கூடப் பாராமல், நழுவிப் போய்விட்டான். சிறு பையன்தானே என்று மற்றவர்களும் விட்டு விட்டார்கள். தொலைந்திருந்தால் அப்பொழுது தொலைந்திருக்குமோ?

யாராவது கேட்டால் தான் முன்னாலேயே நின்றுகொண்டிருந்ததாகச் சொல்லிவிட அவன் எண்ணியிருந்தான். ஆனால் யாரும் அவனை ஒன்றும் கேட்கவில்லை. டிக்கட் வாங்கிக்கொண்டு வந்த பிறகுதான் அவனுக்கு அந்த ஸர்க்கஸ்காரன் நினைவு வந்தது. திரும்பிப் பார்த்தால் அவன் ஜம்புவுக்குச் சமீபத்திலேயே நின்றுகொண்டிருந்தான். அவன் முகமும், விழித்த விழியும் ஜம்புவுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. இப்பொழுதுகூட அந்தக் காட்சி அவன் நெஞ்சை விட்டு அகலவில்லை. ஒரு கால் அவன் அந்தக் கடிதத்தைத் தனக்குத் தெரியாமல் எடுத்திருப்பானோ? அவன்தான் வழியில் தன்னைத் தடுத்திருப்பானோ? அவன் முகத்தைகூடப் பார்க்காமல் போனது எவ்வளவு பிசகு?

ஜம்புவுக்கு அந்தக் கடிதத்தின் சில வரிகள் மட்டும் ஞாபகத்தில் இருந்தன:

"ஏழு மணிக்குக் குப்பத்துக் கடற்கரையில் காத்திருங்கள். தற்காப்புக்கு வேண்டிய ஆயுதங்கள் கையில் இருக்கட்டும். போலீஸ்

புலிகள் விஷயத்தில் கவனமாய் இருக்கவேண்டும். இரண்டு லக்ஷம் அங்கே வந்தால்......" இந்த வரிகள் அந்தக் கடிதத்தில் அடங்கியிருந்தன. இன்னும் சில விஷயங்கள் அவனுக்குப் புரியவில்லை.

ஆனால் புரிந்த வரையில் இது ஏதோ பெரிய திருட்டு விஷயம் என்று அவனுக்குப் பட்டது. அவன் முதலில் இந்தத் தகவலைப் போலீஸுக்குத் தெரிவிப்பதாக இருந்தான். ஆனால் அவனுடைய மற்ற இரண்டு நண்பர்களும் வேறு ஒரு யோசனை சொன்னார்கள். முதலில் என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டு பிறகு அவசியமானால் சொல்வோம் என்றார்கள். ஜம்புவுக்கு அது சரிதான் என்று பட்டது. ஊருக்கு முன்னால் போய்ச் சொல்லிவிட்டு, கடைசியில் விஷயம்

ஒன்றும் இல்லாமல் போனால் போலீஸார் சும்மா விடுவார்களோ, மாட்டார்களோ! யார் கண்டது?

ஜம்பு வெளியில் எழுந்து வந்துவிட நினைத்தான். அந்த ஸர்க்கஸ்காரன் எங்கே இருக்கிறான் என்று இருட்டில் சுற்றும் முற்றும் பார்த்தான். அவன்தான் அந்தக் கடிதத்தை எடுத்திருப்பான் என்று அவனுக்கு நிச்சயமாகத் தோன்றியது. அதில் சிறிதும் சந்தேகமேயில்லை. ஏனென்றால் அந்தக் கடிதத்துக்காக நேற்று முதல் அவன்தான் அந்தக் குரங்கைத் துரத்திக்கொண்டிருந்தான். ஜம்புவுக்கு அது எப்படி நேர்ந்தது என்று தெரியும்.

‘சிங்காரம் ஸர்க்கஸ் கம்பெனி’ மயிலாப்பூருக்கு அருகிலுள்ள பெரிய மைதானத்தில் கூடாரமடித்திருந்தார்கள். ஊரெல்லாம் அவர்களுடைய ஸர்க்கஸைப் பற்றியே பேச்சு. ஏழு சிங்கங்கள், பதினாறு யானைகள், ஆறு புலிகள், இரண்டு கரடிகள், ஒட்டகங்கள் பல ஜாதிக் குரங்குகள், இருபது ரேஸ் குதிரைகள் எல்லாம் அந்தக் கம்பெனியில் இருந்தன. இந்த மிருகங்களைத் தவிர மோட்டார் பீட்ஸ், சைக்கிள் பீட்ஸ், தீக்குளிக்கும் பீட்ஸ், பார் விளையாட்டுக்கள், இன்னும் வேடிக்கையும் பிரமிப்பும் ஊட்டும் பல அற்புதங்கள் செய்வோர்கள் இருந்தார்கள். ஆண்களும் பெண்களுமாக மொத்தம் நூற்றைம்பது பேர்கள் மூச்சு நின்றுபோகும்படி பல அதிசயங்களைச் செய்துகாட்டி ஜனங்களை ஆயிரக் கணக்கில் கூடும்படி செய்தார்கள். டிக்கட் கிடைக்காமல் பலரைத் திரும்பிப்போகும்படியும் செய்தார்கள். எங்கும் இந்த ஸர்க்கஸைப்பற்றியே பேச்சு. அதிலும் அந்தக் குரங்கைத் துரத்திக்கொண்டு வந்தானே அவனுக்கு அங்கே மிகவும் நல்ல பெயர்.

அவன் அநாயாசமாக ஒரு குடம் தண்ணீரைக் குடித்துவிடுவான். வேண்டும்போது டம்ளர் டம்ளராக அந்தக் குடம் தண்ணீரையும் குழாயிலிருந்து வருவதுபோல் உமிழ்ந்து காட்டுவான். சைனா பிளேட் விளையாட்டில் அவன் பேர் போனவன். கையில் ஐந்தாறு குச்சிகளை வைத்துக்கொண்டு அந்தப் பீங்கான் தட்டுக்களை கீழே விழாமல் சுற்ற வைப்பான். எல்லாம் ஒரே காலத்தில் கிர் கிர்ரென்று சுற்றிக்கொண்டேயிருக்கும். எழெட்டுத் தட்டுக்களை இரண்டு கையாலும் காலாலும் வீசி எறிந்துகொண்டேயிருப்பான். அதே சமயத்தில் திரும்பி வரும் தட்டுக்களைப் பிடித்துக்கொண்டேயிருப்பான். வண்ணாத்திப் பூச்சிகள் பறந்து வந்துவிட்டுப் போவதுபோல அந்தத் தட்டுக்கள் அவன் கைக்கும் உயரத்துக்குமாகப் போய் வந்துகொண்டேயிருக்கும். கத்தியில் பந்தத்தைக் கொளுத்தி, குறி பார்த்து எறிவதில் அவனுக்கு ஈடு இணையே இல்லை.

முதல் நாள் ஓடி வந்த குரங்கு அவன் வளர்த்த குரங்குகளில் ஒன்றுதான். அது வந்து இரண்டு மாதங்கள்தான் ஆயின. அவன் அதைப் பழக்கும்போது ஏதோ அஜாக்கிரதையாக இருந்தானாம். அந்தப் புதுக் குரங்கு எப்படியோ தப்பிக்கொண்டு வந்துவிட்டது. ஆனவரையில் அது அவன் கையில் அகப்படவேயில்லையாம். அந்தக் குரங்கு அங்கே பாய்ந்து, இங்கே பாய்ந்து மேஜையிலிருந்து ஒரு முக்கியமான கடிதத்தைத் தூக்கிக்கொண்டு உச்சாணிக்குப் போய் உட்கார்ந்துகொண்டு விட்டது. அப்புறம் என்ன? அவன் அதைத் துரத்த, அது ஓட, இப்படியே அவனும் குரங்குமாகப் பல தெருக்கள் தாண்டி ஜம்பு இருந்த தெருவுக்குள் வந்து விட்டார்கள். குரங்கு இத்தனைக்கும் அந்தக் கடிதத்தைக் கீழே விடவில்லை.

ஜம்பு அன்று காலையில் தற்செயலாக மாடிக்குப் போகும்போது குரங்கு மாடிக் கட்டைப் பிடிச்சுவரில் உட்கார்ந்துகொண்டிருந்தது. கீழே அந்த ஸர்க்கஸ்காரன் குரங்கையே கவனித்துக்கொண்டிருந்தான். ஜம்பு முதலில் அந்தக் கடிதத்தைக் கவனிக்கவில்லை. அது கவரைப் பிரித்து உள்ளிருந்த கடிதத்தைக் கீழே வராந்தாவில் போட்டுவிட்டு, உரையை மட்டும் பல்லால் கடித்துக் கடித்துப் பார்த்தது. கடிதம் கீழே விழுந்ததை யாரும் கவனிக்கவேயில்லை. ஜம்புவைப் பார்த்ததும் குரங்கு 'உர்' என்று சீறியது. ஜம்பு முதலில் கொஞ்சம் பயந்தான். அடுத்த கணம் கீழே ஸர்க்கஸ்காரனைப் பார்த்ததும்தான் அவன் விஷயத்தை ஊகித்துக்கொண்டான்.

"தம்பி, குரங்கை விரட்டு!" என்று ஸர்க்கஸ்காரன் கீழேயிருந்தபடி கூவினான். ஜம்பு, "சூ! சூ!" என்று விரட்டுவதற்காகக் கையை ஓங்கியதும் குரங்கு அடுத்த வீட்டுக்குத் தாவிவிட்டது. அதன் பிறகுதான் ஜம்பு தரையில் கிடந்த கடிதத்தைக் கவனித்தான். அதைப் படித்ததும், 'சரிதா
இது ஏதோ மோசமான திருட
சமாசாரம். அதனால்தான் ஸ
காரன் விடாமல் இந்தக் குர
துரத்தி வந்திருக்கிறான்!'
புரிந்தது. உடனே அதை
வைத்துக்கொண்டு விட்ட

சற்று நேரத்தில் தெருவில் பார்த்தபோது குரங்கையும் அதைத் துரத்திக்கொண்டு வந்த ஸர்க்கஸ்காரனையும் காணவில்லை.

ஜம்பு தன் நண்பர்களைத் தேடிச் சென்றான். கடிதத்தைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டார்கள்.



"என்ன ஆனாலும் நாமே போக லாண்டா!" என்றான் ஜம்பு.

"ஆமாண்டா! போலீஸில் கொடுத்தால் என்ன ஆகுமோ?" என்று பயந்தான் நடராஜன்.

"நாங்களும் உனக்குத் துணை யாக வருகிறோம்" என்றான் லீடர் விசுவம்.

ஜம்பு வீட்டுக்குத் திரும்பும் போது நாலைந்து தெருக்கள் தாண்டி மறுபடியும் அந்த ஸர்க்கஸ்கார னைப் பார்த்தான். ஆனால் என்ன ஆச்சரியம்! அவன் கையில் குரங்கு அகப்பட்டுவிட்டது.

ஸர்க்கஸ்காரன் ஜம்புவைப் பார்த்ததும், "ஏன் தம்பி, அங்கே ஏதாவது கடிதம் ஒண்ணு கிடந்ததா?" என்றான்.

ஜம்பு சிறிதும் தயக்காமல், "கடிதமா? அப்படி ஒன்றும் இல்லையே!" என்றான்.

ஆனால் ஜம்பு தன் கால் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டபோது ஸர்க்கஸ்காரன் அதைக் கவனித்துவிட்டான். அதை ஜம்புவும் பார்த்துவிட்டான்.

இன்று அதையெல்லாம் நினைத்த போது ஜம்புவுக்குச் சந்தேகமாய் இருந்தது. 'நான் வைத்திருக் கிறேன் என்றுதான் ஸர்க்கஸ்காரன் என்னைத் தேடி வந்திருக்கிறான்' என்று அவன் எண்ணினான்.

'நீல மாளிகை'யில் பயங்கரமான ஒரு கட்டம் நடந்துகொண்டிருந் தது. ஜம்புவுக்கு இருப்பே கொள்ளவில்லை.

லீடர் விசவத்திடமும் நடராஜ னிடமும் கூடச் சொல்லிக் கொள்ளாமல் அவன் மெல்லத் தன் இடத்தை விட்டு எழுந்து நழுவி னான். இருளில் தட்டுத் தடுமாறிக் கொண்டு நடந்து வாசலை அடைந் தான். டிக்கட் கொடுக்குமிடத்தில் ஒரு தம்பு தூசியைக் காணவில்லை. ஏதோ வெள்ளையாகக் காகிதம் ஒன்று கிடந்தது. அதுதானோ என்று ஜம்பு அதை எடுத்துப் பார்த்தான். அது ஒரு குப்பைக் காகிதம். அவன் தேடிய கடிதம் எங்குமே இல்லை. அப்படியானால் என்ன செய்வது என்று அவனுக் குப் புரியவில்லை. 'கடிதம் போனது போனதுதான்!' என்று ஜம்பு மனம் கலங்கியவாறே உள்ளே நுழைந்து வந்தான்.

வாசற்படிக்கு அருகில் யாரோ அவன் கையைப் பிடித்துக்கொண் டார்கள்.

"எங்கே தம்பீ நுழையறே? 'தவுட் பாஸ்' எங்கே?" என்று கேட்டான் அவன் கையைப் பிடித் துக் கொண்டவன்.

"பாஸ் யாரும் கொடுக்கவில் லையே?" என்றான் ஜம்பு.

"அப்போ இங்கேயே நில்லு!"

"ஏன்? நான் உள்ளேயிருந்து தானே வந்தேன்? என் நண்பர்கள் கூட உள்ளே உட்கார்ந்திருக்கிறார் களே!" என்றான் ஜம்பு.

"அதெல்லாம் தெரியாது; பாஸ் இருந்தால் உள்ளே போகலாம்; இல்லாவிட்டால் வா என்னோடே!" என்று அவன் ஜம்புவின் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத் துக்கொண்டு வெளியே போனான். வெளியில் என்றால் வெளிச்சமாக இருக்குமே. ஆனால் இவன் இழுத் துக்கொண்டு போன இடம் இன் னும் இருட்டாகவே இருந்தது. மின்சார மோட்டார் ஓடும் சத்தம் அங்கே கேட்டுக்கொண்டிருந்தது. ஜம்பு திமிறமுடியாமல் அவன் பின்னாலேயே போனான்.

(தொடரும்)

கதை: 'ஆர்வி'   சென்ற இதழின் தொடர்ச்சி   சித்திரம்:

ஆபத்து! இளவரசி!! ஆபத்து!! அந்நியர்கள் நம் குகை வாயிலில் நுழைந்து விட்டார்கள்!
இங்கே இவ்விதம் இருக்க, மரக்கலத்தில் காத்திருந்த மந்திரவாதியும் குளிகைத்தீவின் கரையிலிருந்த வீரர்களும் என்ன ஆனார்கள் என்று பார்ப்போம். நிலவு சாய்ந்து விட்டது..
போனவர்கள் என்ன ஆனார்களோ!
ஒன்றுமே சரியாகத் தெரியவில்லையே!
ஹைம் - ஹ்ரீம் - தீப்பந்தமே, குழல் திரும்பும் பாதையெல்லாம் நன்றாகத் தெரியும்படி பிரகாசமாக்கிச் செல்!
கிழவியின் வஞ்சகம் அவனுக்குத் தெரிந்தது
ஆ! இதென்ன!
இதில் ஏதோ சூது இருக்கிறது! நாகநந்தனுக்கும் பிம்பநுபனுக்கும் என்ன விரோதமோ தெரியவில்லையே தீப்பந்தமே! அவர்களுக்குச் சரியான வழியைச் சொல்லிக் கொண்டு போ!
மறுநாள் திடீரென்று கடலில் புயல் வீசுகிறது...
மரக்கலத்திலே ஒரே கலவரம்
திமிங்கிலம் வேறு ஒன்று நெருங்கியது.
பாதளச் சிறையில் நடப்பதை அறிந்த மந்திரவாதி ஒரு மந்திரப் பறவையைச் சிருஷ்டித்து
போ! இளவரசனுக்கு உதவியாக நடந்து
கொள்! அவ
மாறல்
வருக

திமிங்கிலம் மரக்கலத்தை வீழ்த்துகிறது.....
சிலர் திமிங்கிலத்துக்கு இரையாகின்றனர்....
மரக்கலம் மூழ்குகிறது.
ஆ! மந்திரக்கோல எங்கே!
குளிகைத் தீவை நோக்கிச் செல்கிறது......
வாருங்கள், போவோம்!
வீரர்களே! உங்கள் இளவரசனுக்கு ஆபத்து! என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்
வீரர்கள் குகை வாயிலிலுள்ள பாறையைப் புரட்டுகிறார்கள்
விடாதே, கொல்லு!
தள்ளு, போ!
படைவீரர்களுக்கும் குகைக் காவலாளர்களுக்கும் கோரமான கைகலப்பு.
அந்நியர்கள் குகை வாயினுள் மீறி நுழைந்த செய்தியைக் கேட்டதும்...
இவர்களைக் குதிரையில் ஏற்றுங்கள் நான் இதோ வருகிறேன்
முரடர்கள் அவர்களை இழுத்த போது நாகநந்தன் ஓரே பாய்ச்சலில் திமிறி.......
பிம்பரூபா! அந்த வாளை எடு!
நில் அவர்கள் எங்களுடைய ஆட்கள்!

இளவரசி! அவசரப்படாதே!
ஆகா! என்ன அதிசயமான பறவை!
நீ எங்கிருந்து வந்தாய்?
உன் மாமனிடமிருந்து நல்ல செய்தியுடன் வந்திருக்கிறேன்!
இந்த வீரனால் உனக்கு ஒரு பெரிய நன்மை ஏற்படப் போகிறது. நான் அதற்கு ஒரு வழி சொல்கிறேன்!
வீரனே! முதலில் நாம் சபா மண்டபத்திற்குப் போகலாம் பிறகு பேசுவோம்!
பிம்பரூபா! நீயும் வா!
நீங்களே குளிகைகளை வைத்திருங்கள். ஆனால் இங்கே சிறிது நாட்கள் இருக்க வேண்டும்!
உங்களால் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது!
உதவியானால் செய்யத் தடையில்லை உத்தரவானால் அதை மீறுவோம்!
இதோ அவர்களை நான் வழிக்குக் கொண்டு வருகிறேன் பார்!
கவலை வேண்டாம் நான் மந்திரவாதியிடமிருந்து வருகிறேன்! சொல்வது போல் செய்வதாக வாக்களியுங்கள்!
சபாஷ்!!
இளவரசியே! எங்களால் ஆக வேண்டியதைத் தெரிவிக்கலாம்!
இங்கிருந்து நூறு யோசனை தூரத்தில் ஒரு தீவு இருக்கிறது. அங்கே உள்ள அரசியிடம் ஒரு மந்திரச் சேலை உள்ளது. அதைக் கொண்டு வர வேண்டும்!
ஆனால் ஒரு நிபந்தனை. உங்களில் ஒருவர் தான் போகலாம்! மற்றவர் இங்கு இருக்க வேண்டும்!
பூ! இது தானா?
தொடரும்....

பேனுத் திருடன்

என். எஸ். ஸ்ரீ.

6

மோட்டாரின் சொந்தக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை.

ஜமீன்தாரின் தஸ்தாவேஜை அவர் திருடிக்கொண்டு வந்திருக்கிறார். அது ஜமீன்தாரின் முக்கியமான தஸ்தாவேஜு. அதைக் கொண்டு மிரட்டி அவரிடமிருந்து நிறையப் பணம் பறித்து விடலாம். அதற்காகத்தான் அதைத் திருடிக் கொண்டு வந்திருக்கிறார். அதுவரையில் சரிதான்.

ஆனால் இந்த நாசபூஷணம் என்பது யார்? இவன் எப்படி இந்த வண்டிக்குள் வந்தான்? இது மோட்டாரின் சொந்தக்காரருக்குத் தெரியவில்லை.

அவருக்கு எப்படித் தெரியும், பாவம்! கோபு அவருக்குத் தெரியாமல்தானே தொத்திக்கொண்டு வந்திருக்கிறான்!

"அந்த வீண் பாசாங்கெல்லாம் செய்யாதீர்கள். ஒன்றுமே தெரியாதென்று படுக்கையினுள்ளே தஸ்தாவேஜை வைத்திருந்த மாதிரிதான்! அதெல்லாம் இனி ஏமாறமாட்டோம். உண்மையைச் சொல்லுங்கள். உங்கள் கையாள்தானே இவன்?" என்றான் கான்ஸ்டபிள்.

"இவன் யாரோ எனக்குத் தெரியவே தெரியாது" என்றார் மோட்டாரின் சொந்தக்காரர்.

"அடடே! இதெல்லாம் யாரை ஏமாற்றுகிற கதை? உங்களுக்குத் தெரியாமல் கூட உங்கள் மோட்டாரில் வந்து விடுவானோ?"

"சத்தியமாகச் சொல்கிறேன். அவன் யாரோ எனக்குத் தெரியவே தெரியாது."

"பின்னே எப்படி அவன் இந்த மோட்டாருக்குள் வந்தான்?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை."

"என்னப்பா! அவர் அவ்வளவு சுலபத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டு விடுவாரா? அதெல்லாம் கேட்கிற இடத்தில் கேட்டால்தான் சரியான பதில் சொல்வார்" என்றான் இன்னொரு கான்ஸ்டபிள்.

இதையெல்லாம் பார்க்க அழுகை ஒருபுறம், சிரிப்பு ஒருபுறம் வந்தது கோபுவுக்கு. சரியானபடி போலீஸ்காரரிடம் மாட்டிக்கொண்டு விட்டோமே என்று அழுகை ஒரு புறம். பாவம்! யாருடைய மோட்டாரிலோ அவசரத்துக்கு மறைந்து கொள்ளப் போய், அவரே ஒரு குற்றவாளியாக இருப்பதுடன், தன்னால் அவர் எதிர்பாராத விதமாய் மாட்டிக்கொண்டு தவிப்பதைக் காண, சிரிப்பு ஒரு புறம்.

"அப்படி என்றால் நீங்கள் உண்மையைச் சொல்லமாட்டீர்கள்?" என்றான் மறுபடியும் கான்ஸ்டபிள்.

"நான் மறுபடியும் ஆணையிட்டுச் சொல்கிறேன். எனக்குத் தெரியவே தெரியாது. வேண்டுமானால் அவனையே கேட்டுப்பாருங்கள்" என்றார் மோட்டாரின் சொந்தக்காரர்.

"என்ன தம்பி, நீ அவ்வளவு சுலுவில் ஒப்புக்கொண்டு விடப் போகிருயா? மிராசுதாரின் பிள்ளையைக் கொன்றவன் நீதானே?" என்ருன் கோபுவை நோக்கி கான்ஸ்டபிள்.

'இதேதடா வம்பு, கிணறுவெட்டப் பூதம் புறப்படுகிற கதையாக இருக்கிறதே' என்று நினைத்துக் கொண்டு, "மிராசுதாரின் பிள்ளையா?" என்ருன் ஆச்சரியத்துடன்.

"ஆமாம். தெருவில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயதுக் குழந்தையை, மிட்டாய் கொடுப்பதாகச் சொல்லி அழைத்துக் கொண்டு போய், அதன் உடம்பில் இருந்த நகைகளை எல்லாம் கழற்றிக்கொண்டு அதன் கழுத்தை முறித்துப் போட்டு விட்டுச் சென்ற கொலை பாதகனுக்கு உடந்தையாய் இருந்தவனல்லவா நீ?"

"கொலைக்கு நானு உடந்தை?"

"ஆமாம், நீயேதான்."

"ஐயோ, நான் இல்லவே இல்லை. சத்தியமாகச் சொல்லுகிறேன். மிராசுதாரின் பிள்ளையே எனக்குத் தெரியாது."

"நீ இல்லை என்ருல் விட்டுவிடுவோமா? இதோ புகைப்படம்தான் பேசுகிறதே."

"பரவாயில்லையே! பையன் பலே பேர்வழியாக இருக்கிருன். முழுப் பூசனிக்காயை அப்படியே சோற்றில் மறைத்து விடப் பார்க்கிருனே" என்ருன் இன்னொரு கான்ஸ்டபிள்.

"சத்தியமாகச் சொல்லுகிறேன், மிராசுதாரின் குழந்தையே எனக்குத் தெரியாது" என்ருன் கோபு. அவன் கண்களினின்றும் நீர் பொல பொல வென்று பெருகி ஓடியது.

"அப்படியானுல் இவரைக்கூட உனக்குத் தெரியாதா?" என்று மோட்டாரின் சொந்தக்காரரைச் சுட்டிக் காட்டினுன் கான்ஸ்டபிள்.

"தெரியாது" என்ருன் கோபு.

"பின்னே எப்படி நீ இந்த மோட்டாருக்குள் வந்தாய்?" என்ருன் கான்ஸ்டபிள்.

கோபு சிறிது தயங்கினுன். தான் பேனு திருடி, அதை விற்க வந்த இடத்தில் நேர்ந்த சம்பவத்தைச் சொல்லலாமா என்று யோசித்தான். அதைச் சொனனுல் தன்மீது திருட்டுக் குற்றம் ருஜுவாகி விடுமே என்று பயந்தான்.

"என்ன யோசிக்கிருய் தம்பி? இதற்கு எந்தமாதிரி பளுகலாம் என்று யோசிக்கிருயா?" என்ருன் கான்ஸ்டபிள்.

"இல்லை, மூர்மார்க்கெட்டின் பக்கத்தில் எவனே வித்தை செய்து காட்டிக்கொண்டிருந்தான், அதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது எங்கள் உபாத்தியாயர் அங்கே வந்து விட்டார். அன்று நான் பாடம் வாசிக்கவில்லை. பாடம் வாசிக்காமல் வித்தை பார்த்துக்கொண்டிருந்தால் அடிக்கப் போகிருரே என்று பயந்து அவர் கண்ணில் படாமல் இருப்பதற்காக, அப்பொழுது அங்கே பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இந்த மோட்டாரில் புகுந்து கொண்டு விட்டேன். உபாத்தியாயர் அங்கேயே நின்றுகொண்டிருந்தார். அதற்குள் இவர்கள் (மோட்டாரின் சொந்தக்காரரும் டிரைவரும்) வந்து விட்டார்கள். இவர்கள் நான் இருந்ததைப் பார்க்கவில்லை. மூட்டை முடிச்சுகளைப் போட்டு அடைத்து விட்டார்கள். உடனே மோட்டார் கிளம்பிவிட்டது" என்று சமயத்துக்குத் தகுந்தவாறு ஒரு கதை விட்டான் கோபு.

கான்ஸ்டபிள் மூக்கின் மேல் விரல் வைத்து விட்டு, “பரவாயில்லையே. பையன் பலே பேர்வழியாக இருக்கிறானே! எவ்வளவு பொருத்தமாக, நம்பும்படியான கதை அளக்கிறான்!” என்று சொல்லிவிட்டு, “யாராவது கேட்டால் இந்த மாதிரியெல்லாம் சொல்லும்படி சொல்லிக் கொடுத்திருக்கிறார்களா? என் தம்பீ!” என்றான்.

“எனக்கு யாரும் எதுவும் சொல்லிக் கொடுக்கவில்லை. நடந்த விஷயத்தைத்தான் சொல்லுகிறேன்” என்றான் கோபு.

“இதோ உன் போட்டோ இருக்கிறது. இதிலும் நாகபூஷணம் என்றுதான் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. உன் பெயரும் நாகபூஷணம் என்று சொன்னாய். அத்துடன் ஜமீன்தாரின் தஸ்தாவேஜும் கிடைத்திருக்கிறது.

இதற்கு மேலும் ஏமாற்ற முடியுமா?'' என்றான் கான்ஸ்டபிள்.

"நான் வேடிக்கைக்காக என் பெயரை நாகபூஷணம் என்று சொன்னேன். அது வினையாய் வந்து முடிந்துவிட்டது. உண்மையில் என் பெயர் நாகபூஷணம் இல்லை. கோபாலன் என்பது என்னுடைய பெயர்! கோபு என்று வீட்டில் கூப்பிடுவார்கள். வேண்டுமானல் வீட்டிலோ, பாடசாலையிலோ வந்து கேட்டுப் பாருங்கள்'' என்றான் கோபு.

"ஓகோ, இது வேறேயா? அப்படியானல் நீ லேசுப்பட்டவனில்லை'' என்றான் கான்ஸ்டபிள்.

"நீ ஒருத்தன்! நான்தான் சொன்னேனே. அவர்கள் கை தேர்ந்தவர்கள். அவ்வளவு சுளுவில் உண்மையை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போக வேண்டியதுதான். நேரமாகிறது'' என்றான் இன்னொரு கான்ஸ்டபிள், இந்தக் கான்ஸ்டபிளை நோக்கி.

"என்னமோ சொல்லிவிடுவார்களாக்கும் என்று பார்த்தேன். நீ சொல்கிறமாதிரி வழிக்கு வரமாட்டார்கள் போல்தான் தோன்றுகிறது. போக வேண்டியதான்!'' என்று சொல்லிவிட்டு, "சரி புறப்படுங்கள்'' என்றான்.

உடனே மோட்டாரின் சொந்தக்காரர் தம் ஜேபியிலிருந்து நூறு ரூபாயை எடுத்து, கான்ஸ்டபிளிடம் கொடுக்கப் போனர்.

"என்ன இது?'' என்றான் கான்ஸ்டபிள்.

"பரவாயில்லை, வாங்கிக்கொள்ளுங்கள்'' என்றார் அவர்.

"ஓகோ லஞ்சம் கொடுத்துத் தப்பித்துக் கொள்ளலாம் என்ற யோசனையா? அதெல்லாம் இங்கு ஒன்றும் நடக்காது'' என்று சொல்லி ரூபாயை வாங்க மறுத்துவிட்டான்.

பிறகு எல்லோரும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்கள்.

போலீஸ்காரர்கள் நடந்த விஷயத்தையெல்லாம் போலீஸ் அதிகாரியிடம் சொல்லிவிட்டு, கோபுவின் சாமர்த்தியத்தைப் பற்றிச் சொன்னார்கள்.

"அடடே! அவ்வளவு கெட்டிக்காரனு இவன்? அப்படியானல் அவசியம் பார்க்க வேண்டியதுதான்'' என்று சொல்லிவிட்டு, கோபுவைக் கூப்பிட்டு, "என்ன சமாசாரம்? உண்மையைச் சொல்லிவிடு'' என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

ராஜா: மாமா! குடிக்கத் தண்ணீர் வேணும் மாமா!

மாமா: பேசாமல் படிடா!

ராஜா: (சற்றுப் பொறுத்து) மாமா! மாமா!

மாமா: இதோ பிரம்பை எடுத்துக்கொண்டு வரேன்! சும்மா கூப்பிட்டுக்கொண்டா இருக்கிறாய்?

ராஜா: பிரம்பைக் கொண்டு வரும்போது அப்படியே தண்ணீரும் கொண்டுவந்துடுங்க, மாமா!

—குமார்.

கோபு கான்ஸ்டபிளிடம் சொன்ன கதையையே சொன்னான்.

"சரிதான், பேர்வழி லேசுப்பட்டவன் இல்லைதான். கொஞ்சம் 'இஞ்ஜெக்ஷன்' செய்தால்தான் வழிக்கு வருவான்" என்று சொல்லி ஒரு குண்டூசியை எடுத்து கோபுவின் நகக் கணுவில் சுருக்கென்று ஒரு குத்துக் குத்தினார்.

"ஆ, ஐயோ! அப்பா, அம்மா!" என்று அலறினான் கோபு.

* * *

"என்னடா இது! கோபு! என் உளறிக் கொட்டுகிறாய்? எழுந்து உட்கார்" என்று கோபுவின் தாயார், படுக்கையில் தூங்கிக்கொண்டிருந்த கோபுவை எழுப்பி உட்கார வைத்தாள்.

"என்னடா, அப்பா! ஏதாவது சொப்பனம் கண்டாயா?" என்று கேட்டாள்.

"ஆமாம் அம்மா! சொப்பனம் தான்" என்றான் கோபு.

'ஆகா! எவ்வளவு பயங்கரம்! ஏன் ராமுவின் பேனாவைத் திருடினோம்? சொப்பனமில்லாமல் உண்மையாகவே இதெல்லாம் நடந்திருந்தால்?' என்று எண்ணியபோது கோபுவின் உடம்பு பயத்தால் நடுங்கியது.

எப்பொழுது பொழுது விடியப் போகிறது என்று பார்த்துக்கொண்டிருந்தான்.

பொழுது விடிந்ததோ இல்லையோ, பேனாவுடன் ராமுவின் வீட்டுக்குச் சென்று, "என் கணக்குப் புத்தகத்தில் எப்படியோ உன் பேனா தெரியாமல் வந்துவிட்டது. இந்தா!" என்று சொல்லி ராமுவின் கையில் கொடுத்தான் பேனாவை.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ராமுவின் தகப்பனார், "பேஷ், யோக்கியமான பையன்!" என்று கோபுவைத் தட்டிக் கொடுத்தார்.

பேனாவை ராமுவிடம் கொடுத்த பிறகுதான் கோபுவின் மனம் நிம்மதியடைந்தது. பின்னர் அவன் சந்தோஷமாக வீட்டுக்குத் திரும்பினான். (முற்றும்)

இயற்கை விநோதங்கள்

வே. ரா. சுந்தரராமன்

1. காற்றடி எப்படிப்பறக்கிறது? காற்றாடி என்பது காற்றைவிட லேசானதா? இல்லை. காற்றாடிக் காகிதமானது காற்றைவிடக் கனமுள்ளது. அதை நன்றாய்க் கசக்கிச் சிறு உருண்டையாகச் செய்துமேலே விட்டெறியுங்கள். அந்தக் காகிதப் பந்து கனமுள்ள மற்றப் பொருள் களைப்போல் கீழே பூமியில் வந்து விழும். ஆனால் அது மெல்லிய காகிதமாகப் பரப்பப்பட்டுள்ளதால் அதன் மேல் அதிகக் காற்று வீசி, அந்தக் காற்றின் வேகத்தினால் உயரே அடித்துக்கொண்டு போக முடிகிறது.

பொருள்களை ஏந்திப் பிடித்துத் தாங்கும் சக்தி காற்றுக்கு உண்டு. காற்றாடியை நாம் அங்கும் இங்கும் ஓடி இழுத்து ஆட்டுவதால் காற்றின் தாங்கும் சக்தி இன்னும் அதிகரிக்கிறது. காற்றாடி கீழே விழாமல் பறக்கிறது.

2. தண்ணீரைக் காய்ச்சினால் ஏன் கொதிக்கிறது? - இந்த உலகத்தி லுள்ள ஒவ்வொரு பொருளும் மூன்று உருக்களில் இருக்கலாம். அம்மூன்று உருக்கள்: திட உரு, திரவ உரு, வாயு உரு என்பனவே. அம்மாதிரியே தண்ணீரும் மூன்று உருக்களில் இருக்கும். திடப்பொருளாக இருக்கையில் அதை நாம் பனிக்கட்டி என்றும் வாயுப் பொருளாக இருக்கையில் நீராவி என்றும் சொல்லுகிறோம். எந்தப் பொருளையும் உஷ்ணத்தின் உதவியைக் கொண்டு ஓர் உருவிலிருந்து மற்றோர் உருவுக்கு எளிதில் மாற்றலாம். உதாரணமாகப் பனிக்கட்டியைக் காய்ச்சினால் அது தண்ணீராகவும், தண்ணீரைக் காய்ச்சினால் அது நீராவியாகவும், தண்ணீரைக் குளிர்ச்சி செய்தால் அது பனிக் கட்டியாகவும் மாறும்.

தண்ணீரைக் காய்ச்சும்பொழுது அது நீராவியாக மாறுகிறது. அடிப் பாகத்தில் மாறும் நீராவியானது காற்று ரூபமாக இருப்பதால் குமிழி குமிழியாகத்தண்ணீரின் மேலேஎழுகிறது. அம்மாதிரி எழுவதைத்தான் நாம் 'கொதித்தல்' என்கிறோம்.

3. மிருகங்கள் ஒன்றுடன் ஒன்று சம்பாஷிக்கின்றனவா?— மிருகங்கள் தங்கள் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் தங்கள் இனத்தைச் சார்ந்த பிற ஜந்துக்களுக்குத் தெரிவிக்கும் சக்தியை உடையனவாகவே இருக்கின்றன. ஆதலால் மிருகங்களும் நம்மைப் போல் பேசுகின்றன என்றே சொல்லலாம். மனிதர்களாகிய நாமும் முதன் முதலில் நம் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் ஒருவருக்கு ஒருவர் தெரிவித்துக் கொள்வதற்கே பாஷையை ஏற்படுத்திக்கொண்டோம். குழந்தைகளாயிருக்கும்போது நாம் பேசும் பாஷையானது பெரும்பாலும் இந்த மிருகங்களின் பாஷையையே ஒத்திருக்கிறது.

குழந்தைகளுக்குச் சந்தோஷத்தைச் சிரிப்பினாலும் துக்கத்தையும் வலி, நோய் முதலியவைகளையும் அழுகையினாலும் தெரிவிக்க மாத்திரம்தான் தெரிகிறது.

அதே மாதிரி மிருகங்களுக்கும் சந்தோஷத்தை ஒரு விதமான சத்தத்தினாலும், பயத்தை ஒருவித மான சத்தத்தினாலும், கோபத்தை வேறு ஒருவிதச் சத்தத்தினாலும் தெரிவிக்க இயலுகிறது. ஆகையால் ஒருவிதத்தில் மிருகங்களும் பேசுகின்றன என்றே நாம் கருத வேண்டும்!

4. ஆந்தை ஏன் பகலில் வெளியில் வராமல் இரவிலேயே வெளியில் வருகிறது? - ஆந்தை மட்டுமல்ல; இன்னும் பறவை இனத்தில் வௌவாலும் மற்ற விலங்குகளுள் பூனை, புலி முதலியவைகளும் இரவிலேயே சஞ்சரிக்கும் ஜந்துக்கள்.

முக்கியமாக இரை தேடுவதற்காகத்தான் மிருகங்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியில் வருகின்றன.

சில மிருகங்கள், பறவைகளின் ஆகாரப் பொருள்கள் பகலில் அகப்படுகின்றன. சிலவற்றிற்கு இரவிலேயே அகப்படுகின்றன. ஆதலால் முதல் வகுப்பில் சேர்ந்தவை பகலில் சஞ்சரிக்கும் ஜந்துக்களாகவும் பின்னால் கூறியவை இரவில் சஞ்சாரம் செய்யும் ஜந்துக்களாகவும் இருக்கின்றன. அவைகளின் அங்க அவயவங்களும் அதற்கேற்றமாதிரி மாறுபடுகின்றன. ஆந்தை, வௌவால், பூனை, புலி முதலியவற்றின் கண்கள் இருட்டிலும் பார்வையுடையனவாக அமைந்திருக்கின்றன.

புள்ளிமான்

'பூவண்ணன்'

புள்ளிமானைப் பார்—தம்பி
புள்ளிமானைப் பார்!

எல்லை இல்லா ஆனந்தத்தால்
துள்ளி ஓடிடும் - தம்பி
துள்ளி ஓடிடும்.

உள்ளம் தன்னைச் சடுதியினில்
கொள்ளை கொண்டிடும் - தம்பி
கொள்ளை கொண்டிடும்.

தொல்லை எவர்க்கும் தந்திடாது
துள்ளி ஓடிடும் - தம்பி
துள்ளி ஓடிடும்.

பள்ளம் மேடு பார்த்திடாது
பாய்ந்து ஓடிடும் - தம்பி
பாய்ந்து ஓடிடும்.

புள்ளிமானைப் பார் - தம்பி
புள்ளிமானைப் பார்!

கதையின் முடிவு

மணி

பாபுவுக்கு வெகு நாளாகவே கதை எழுதவேண்டும் என்ற ஆசை இருந்து வந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக் கூடம் விடுமுறையாதலால் கதை எழுதலாம் என்று உட்கார்ந்தான்.

வெகு நேரம் யோசித்து யோசித்துப் பார்த்தான். கற்பனை ஓடவே இல்லை. தலையைச் சொறிந்துகொண்டான். பேனவை உதட்டில் வைத்து யோசித்தான். எப்படியோ ஒருவிதமாக இரண்டு வரிகளை எழுதி முடித்தான்.

''மாலை மணி ஆறு இருக்கும். செவ்வானத்தின் கீழ் சூரியன் மறைந்துகொண்டிருந்தான்'' என்று எழுதியிருந்ததைப் படித்தும் பாபுவுக்கு ஷாக் அடித்தாற் போலிருந்தது. 'ஐயையே! இது கண்ணன் பத்திரிகையில் வெளி வந்த கதையின் ஆரம்பம் அல்லவா?' என்று அந்தக் காகிதத்தைக் கசக்கி எறிந்தான்.

பிறகு அடுத்த கதை: '''சோமு' என்று கூப்பிட்டுக்கொண்டே சுசீ ஓடிவந்தாள்.'' - 'சே! இது குறும்பு என்ற பத்திரிகையில் வெளிவந்தது அல்லவா?' என்று அதையும் கசக்கித் தரையில் எறிந்தான் பாபு. ''சாம்பு சினிமா பார்த்துவிட்டு வந்துகொண்டிருந்தான். வரும் வழியில் ஒரு மதகு. அதனடியில் ஓர் ஆல மரம். மரத்தில ஒரு பேய்'' -'சே! தூ! இதுவும் நமட்டு விஷமம் என்ற பத்திரிகையில் வந்த கதையின் நடுவில் வருகிறது என்று அதையும் கசக்கித் தரையில் எறிந்தான். ''சாமுவுக்கும் சோமுவுக்கும் பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் சண்டை''- 'அடாடாடா! இதுவும் வெல்லம் பொங்கல் மலரில் வெளிவந்தது' என்று கசக்கி எறிந்தான். இவ்விதமே எழுதி எழுதி, காகிதங்களால் குப்பைக்கூடை முழுவதையும் நிறைத்துவிட்டான். அத்தனை காகிதங்களையும் பார்த்ததும் அப்பா வந்தால் உதை விழும் என்ற பயம் பிடித்துக் கொண்டது. எல்லாக் காகிதத்தையும் சேர்த்து அடுக்கினன். பழைய பேப்பர் விற்கும் செட்டியாருக்கு அர்ப்பணித்தான். அதில்கிடைத்த நாலணுவில் ஐஸ்கிரீம் வாங்கி அருமைத் தங்கை கோமுவுடன் சுவைத்துக்கொண்டிருந்தான்.

நகைப் பெட்டி

'ராஜன்'

ஊர்க்கோடியில் அமைந்திருந்தது அந்த அழகான பங்களா. மாலை நேரத்து மஞ்சள் வெயிலில் அது பொன்னிறமாகக் காட்சியளித்தது. வடக்கே ஒரு பெரிய ரஸ்தா. இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்கள். ஒரு பாழடைந்த சத்திரம் எதிரே உருக்குலைந்து நின்றது. வெளியே ஒட்டகத்தைப்போல் உயர்ந்து நின்ற சுமைதாங்கியின் மீது ஒரு முரட்டு ஆசாமி உட்கார்ந்திருந்தான். நீலநிறச் சட்டை; காக்கிக் கால்சட்டை. அவன் கொஞ்சம் தாடி வளர்த்திருந்தான். தலைமயிர் காற்றில் பறந்தது. அவனுடைய கண்கள் ரத்தம்போல் சிவந்திருந்தன. கொடூரமான பார்வை.

மஞ்சள் வெயில் மங்கிக் கொண்டே வந்தது. ஆனால் இன்னும் இருள் கவியவில்லை. இந்தச் சமயத்தில், ஆடாமல் அசையாமல் அன்னம்போல் பறந்து வந்த ஒரு ஹட்ஸன் கார் பங்களாவின் எதிரே சக்கென்று நின்றது. அதிலிருந்து நடுத்தர வயதான ஓர் அம்மாள் இறங்கினாள். அவளுடைய உடம்பெல்லாம் வைரத்தாலும் தங்கத்தாலும் இழைத்த நகைகள். அந்த அம்மாள் காரை விட்டுக் கீழே இறங்கி விடுவிடு என்று உள்ளே போனாள். கார் காரேஜுக்குள் நுழைந்தது.

சுமைதாங்கியின் மீது உட்கார்ந்திருந்த ஆசாமி வைத்த கண் வாங்காமல் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். "ஸார்! பசி வயத்தைக் குடையுது. ஓரணா இருந்தாக் கொடுங்க!" என்ற குரலைக் கேட்டுக் குனிந்து பார்த்தான் அவன்.

கீழே ஒரு பிச்சைக்காரப் பையன் கையேந்தி நின்றிருந்தான். அவனுடைய உடம்பில் கிழிந்து தொங்கிக்கொண்டிருந்த சட்டையும் கால் சட்டையும் எப்படியோ ஒட்டிக் கொண்டிருந்தன. அவனுடைய நாக்கு உலர்ந்துபோயிருந்தது!

சுமைதாங்கியின்மீது உட்கார்ந்திருந்தவன் சிரித்தான். சாதாரண சிரிப்பா அது? சர்வ கடூரமான சிரிப்பு! பிச்சை கேட்க வந்த பையன் பயந்துபோய்விட்டான்.

"டேய்! இன்னுமா நிக்கறே? போடா மரியாதையா..." என்று

உறுமினான் அந்தப் பயங்கரப் பேர்வழி.

பையன் மருண்டுபோய் வந்த வழியே திரும்பினான். அப்போது அவன் மீது லொட்டென்று ஒரு வஸ்து விழுந்து கீழே உருண்டது. பையன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். கீழே ஒரு ரூபாய் நாணயம்! சுமைதாங்கியின்மேல் இருந்த ஆசாமியை அவன் பார்த்தான்.

“என்னடா முழிக்கறே? அதை எடுத்துக்கோ!”

‘அந்த ஆசாமிக்கு என்ன பைத்தியமா?’ பையன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

“என்னடா அது? பசி எடுக்குதா, இல்லேயா உனக்கு?”

“எடுக்குது.”

“அப்போ எடுத்துக்கோ!”

அவன் துணிந்து ரூபாயை எடுத்துக்கொண்டான்.

“உன் பேர் என்னடா?”

“முருகன்.”

“எந்த ஊர்?”

“தெரியாது!”

“என்னடா வயசு உனக்கு?”

“தெரியாது!”

“அதுகூடத் தெரியாதா? நீ எத்தனை நாளாச் சாப்பிடல்லே?”

“நேத்து மத்தியானத்திலேயிருந்து சாப்பிடல்லே!”

“சரி, ஊருக்குள்ளே போய் ஓட்டல்லே மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டுவிட்டு இங்கே வா!”

“எதுக்குங்க?”

“எவண்டா இவன்? சொல்றபடி கேளு! உனக்குத் தினம் மூணு வேளை சாப்பாடு வேணுமா வேண்டாமா?”

“வேணுங்க!”

“அப்போ சொல்றமாதிரி கேளு!”

பையனுக்குக் குஷி பிறந்துவிட்டது. ஆனாலும் ஏதோ சொல்வதற்குத் தயங்கி நின்றான்.

“என்னடா தயங்கறே?”

“ஒரு ரூபாய் எடுத்துக்குனு போனா, ரூபாய் ஏதுடான்னு உதைப்பாங்களே!”

உடனே சுமைதாங்கியின் மீதிருந்து அந்த ஆசாமி குதித்து, “வாடா, போவோம்! நானும் ஓட்டலுக்கு வர்றேன். எனக்கும் பசி எடுக்குது!” என்று சொல்லிக்கொண்டே நடந்தான்.

அந்த ஆசாமியின் போக்கு அந்தப் பையனுக்குப் புரியவில்லை! அவன் கூடவே நாயைப்போல் ஓடினான்!

* * *

எங்கும் இருள் கவிந்துவிட்டது. மணி எட்டு இருக்கும்.

வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு இருவரும் அந்தப்

பாழடைந்த சத்திரத்தை அடைந்தார்கள்.

"காலெல்லாம் வலிக்குது. கொஞ்ச நாழி படுத்துக்கறேன்!" என்றான் முருகன்.

"அப்புறம் படுத்துக்குவே! அந்த மரத்து மேலே ஏறுடா!" என்றான் அந்த ஆசாமி.

"எதுக்குங்க?"

"ஏறு, பிறகு சொல்றேன்!"

"முதல்லே சொல்லுங்க!"

"ஒரு வேடிக்கை காட்டறேன்!"

அவன் அந்த மரத்தின்மீது ஏறினான். அவன் பின்னாலேயே அந்த ஆசாமியும் ஏறி வந்தான்.

பாதி மரம் ஏறியானதும், "இருட்டிலே பயம்மாயிருக்குங்க!" என்றான் முருகன்.

"நான் கூட வர்றப்போ, உனக்கென்னடா பயம்? இன்னும் மேலே போ!"

இருவரும் உச்சாணிக் கிளையை அடைந்தார்கள்.

"அதோ பாருடா!" என்றான் அந்த ஆசாமி. முருகன் அவன் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தான். எதிரே அவர்களுக்கு நேராக அந்தப் பங்களாவின் மூன்றாவது மாடி தெரிந்தது. அந்த மாடியின் முதல் அறையில் மட்டும் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்த அறையில் ஓர் அம்மாள் நின்றுகொண்டு, மேஜைமீது கிடந்த வைர நகைகளை எல்லாம் எடுத்து ஒரு பெட்டியில் வைத்துப் பக்கத்திலிருந்த பீரோவில் வைத்துப் பூட்டினாள். அடுத்த நிமிஷம் அந்த அம்மாள் விளக்கை அணைத்தாள். தடால் என்று கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது!

"இதில் என்னங்க வேடிக்கை?" என்றான் முருகன்.

"அந்த அறையைப் பார்த்தியா?"

"ஆமாம்!"

"பீரோவைப் பார்த்தியா?"

"ஆமாம்."

"அந்தப் பெட்டியைப் பார்த்துக்கினியா?"

"எந்தப் பெட்டியை?"

"நகைப் பெட்டியை!"

"ஆமாம்."

"சரி; பேசாமெ கீழே இறங்கி வா! வளவளன்னு பேசாதே!"

முருகன் உடல் ஒரு தடவை ஆடியது. அவனைப் பயம் கௌவிக்கொண்டது. நடுங்கிக்கொண்டே கீழே இறங்கினான்.

"டேய், போய் அந்தச் சத்திரத்துலே படுத்துக்கோ!" என்றான் அந்த ஆசாமி.

"பயம்மா இருக்குங்களே!"

"ஒண்ணும் பயமில்லே! போய்ப் படுத்துக்கோ!" என்று உள்ளே தள்ளினான்.

"ஐயையோ! இங்கே பயம்மா இருக்குதே!" என்று கூவினான் முருகன்.

வெளியே நின்றிருந்த அந்த இரக்கமற்றவன் பயங்கரமாகச் சிரித்தான்.

* * *

ஊருக்குள்ளிருந்த மணிக்கூண்டுக் கடிகாரம் பன்னிரண்டு தடவை ஒலித்துவிட்டு ஓய்ந்தது.

பிறைச்சந்திரன் தேய்ந்து மறைந்து வெகுநேரமாகிவிட்டது. எங்கும் இருள்!

சத்திரத்தின் திண்ணையில் படுத்திருந்த முரடன் எழுந்திருந்தான். உள்ளே சென்று, "ஏய் முருகா.." என்று கூவினான்.

"உம்" என்றான் முருகன்.

"எழுந்து வாடா!"

பையன் வெளியே வந்தான். அவனிடம் ஒரு சாவிக் கொத்தை எடுத்துக் கொடுத்தான் முரடன்.

"என்னத்துக்குங்க இந்த சாவிக் கொத்து?" என்றான் முருகன்.

"அந்தப் பங்களாவின் மூணாவது மாடிக்கு இப்போ நீ போகணும்!"

"ஐயோ!"

"அதெல்லாம் [illegible]டக்காது! பங்களாவுக்குப் பக்கத[illegible]ல ஒரு மரம் இருக்குது பாரு. அ[illegible] மரத்துலே இருந்து முதல் மாடிக்குத் தாவணும். பிறகு, அங்கேயிருந்து தண்ணீர்க்குழாயைப் பிடிச்சுக்கினு மூணாவது மாடிக்குப் போ. அறை ஜன்னல் வழியா உள்ளே குதி. அந்த ஜன்னல் வழியா உள்ளே போக உன்னுடைய சின்ன உடம்பாலேதான் முடியும்!"

"ஐயையோ!"

"உஷ்! கத்தாதே! அந்தப் பீரோவை இந்தச்சாவிக்கொத்தை உபயோகிச்சு எப்படியாவது திறந்து அந்த நகைப்பெட்டியை அபேஸ் செய்துக்குனு வரணும்!"

"அம்மாடியோ!"

"மூணு வேளை சாப்பாடு வேணுமா?"

"வேணும்! வேணும்! நான் திருடமாட்டேன்!"

"திருடித்தான் ஆகணும்!"

"முடியாது!"

"முடியாதா? கையிலே என்ன இருக்கு பார்! ஒரே குத்து! இதே இடத்துலே குளோஸ் ஆயிடுவே!"

அந்த முரடனின் கையில் ஒரு பிச்சுவாக் கத்தி பளபளத்தது!

"யாராவது பிடிச்சுக்கிட்டா?"

முருகனுக்குப் பயமாக இருந்தது. 'அட, கடவுளே! இவனிடம் ஏன் பிச்சை கேட்டோம்?' என்றிருந்தது. அவன் பயந்துகொண்டு நடந்தான். முரடன் பின்னாலேயே நடந்தான்.

முருகன் சட்டென்று கீழே குனிந்து ஏதோ இருட்டில் பொறுக்கத் தொடங்கினான்.

"டேய், என்னடா அது?"

"ஒண்ணும் இல்லை, காலை இடிச்சுது."

இருவரும் பங்களாவை நெருங்கினார்கள்.

"சீக்கிரம், ஆகட்டும்! ஏமாத்திப்பிட்டு ஓடிடலாம்னு பார்க்காதே! எலும்பை ஒடிச்சுப்பிடுவேன் ஒடிச்சு!" என்றான் முரடன்.

"நீங்க பயப்படாதீங்க! அஞ்சே நிமிஷம்!" என்று சொல்லிவிட்டு ஓடினான் முருகன்.

ஐந்து நிமிஷம் கழிந்தது.

பங்களாவில் மூன்றாவது மாடி முதல் அறையில் விளக்கு எரிந்தது. இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் அது அணைந்துவிட்டது.

மறு சில நிமிஷங்களில் முரடனின் முன்பு நகைப்பெட்டியுடன் காட்சியளித்தான் முருகன்.

"சபாஷ்!" என்றான் முரடன்.

"எனக்கு!" என்றான் முருகன்.

"இதுதான் உனக்கு!" என்று பெட்டியால் முருகனுடைய மண்டை மீது படாரென்று அடித்துவிட்டு ஓடிவிட்டான் முரடன்.

"ஐயோ!" என்று அலறிக் கொண்டே மண்டையில் வழியும் ரத்தத்துடன் கீழே விழுந்தான் முருகன். நினைவு தவறிவிட்டது.

*　　*　　*

விடிந்தது.

தோட்டத்தில் அடிபட்டு விழுந்து கிடந்த முருகனை முதல் முதலில் வேலைக்காரன்தான் பார்த்தான். அவன் அலறிப்புடைத்துக்கொண்டு உள்ளே ஓடிப்போய், பங்களாவின் சொந்தக்காரரான வடிவேல் செட்டியாரிடம் விஷயத்தைச் சொன்னான். உடனே செட்டியார் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்து பார்த்தார். அவருடைய மனைவி பங்கஜம்மாளும் ஓடிவந்து பார்த்தாள். "ஐயோ! பாவம்! டாக்டரைக் கூப்பிடுங்க!" என்று கத்தினாள்.

டெலிபோன் பறந்தது. டாக்டர் வந்தார். அடிபட்ட இடத்தில் மருந்து போட்டுக் கட்டிவிட்டுப் போனார்.

அரை மணி நேரம் கழித்து முருகன் கண்களை விழித்தான்.

"யாரப்பா நீ? உன் மண்டையிலே யார் அடிச்சது?" என்று கேட்டார் செட்டியார்.

"என் கதையை விவர்மாச் சொல்றேன். என்னை மன்னிக்கணும்!" என்றான் பரிதாபமாக.

"மன்னிக்கணுமா? எதுக்கு?"

"உங்க வீட்டிலே திருட வந்தேன். அதுக்காக!"

"திருட வந்தியா?"

"ஆமாங்க! நானாகத் திருட வரல்லே! ஒரு போக்கிரி என்னைத் திருடச் சொன்னான். இல்லேன்னா என்னைக் கொன்னுப் போட்டுடுவேன்னு பயமுறுத்தினான்."

இதைக் கேட்டதும் பங்கஜம்மாள் அலறிப்புடைத்துக்கொண்டு மூன்றாவது மாடிக்கு ஓடினாள்.

"அப்புறம் என்ன நடந்தது?" என்றார் வடிவேல் செட்டியார்.

"நான் [illegible]ண்ணீர்க் குழாயைப் பிடிச்ச[illegible] மூன்றாவது மாடிக்கு ஏறிப்[illegible]னன். திருட்டுச் சாவி போட[illegible] பீரோவைத் திறந்து, நகைப் பெட்டியை எடுத்து..."

"அட பாவி!"

"சொல்றதைக் கேளுங்க! நகைப் பெட்டியை எடுத்து, அதிலேயிருந்த நகைகளை எல்லாம் மேஜை மேல் கொட்டிப்பிட்டு, அந்தப் பெட்டி நிறைய நான் முன்ஜாக்கிரதையாகக் கொண்டுவந்திருந்த கற்களைப் போட்டு நிரப்பிக் கொண்டுபோய் அந்தப் போக்கிரி கிட்டே கொடுத்தேன். அவன் அந்தப் பெட்டியாலே என் மண்டை மேலே அடிச்சுப்பிட்டு ஓடிப்போய் விட்டான்!"

"நிஜமாவா?"

இந்தச் சமயத்தில் திரும்பி ஓடிவந்த பங்கஜம்மாள், "நகையெல்லாம் அப்படியே மேஜைமேலே கிடக்குது! பெட்டியைத்தான் காணோம்!" என்றாள்.

"பெட்டி போனால் போவுது போ! இந்தப் பையன் இனிமே நம்ம வீட்டிலேயே வேலை செய்துக்கிட்டு இருக்கட்டும்...நான் போய் அந்தத் திருடனைப் பத்தி, போலீஸ் டேஷன்லே ரிப்போர்ட் கொடுத்திட்டு வர்றேன்!" என்று சொல்லிக்கொண்டே செட்டியார் புறப்பட்டார்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(R) 222. ராமதாஸ், T.N., கடலூர். 223. ராஜேஸ்வரி, M., புதுக்கோட்டை. 224. ராஜலக்ஷ்மி, வைத்தியநாதன், ஜானகிராமன், T.G., கிட்டல்பாடி. 225. ராஜலக்ஷ்மி, லலிதா, பூனா-3. 226. ராமநாதன், K., தறையூ. 227. ராமநாதன், அண்ணுமலை. திருப்பம்பளப்பிட்டியா. 228. ராமநாதன், கோபாலன், K. R., புனா-2. 229. ராமநாதன், தியாகராஜன், P., ராமநாதபுரம். 230. ராஜசேகரன், G., பாபநாசம். 231. ராகவன், சரோஜா, ராஜலக்ஷ்மி, கமலா, R. V., புது டில்லி. 232. ராகவன், R., ஜாம்ஷெட்பூர்-3. 233. ராமன், S., சுப்பிரமணியபுரம். 234. ராமன், K., பம்பாய்-24. 235. ராம்மோகன், P. S., புகலூர். 236. ராமசாமி, G., பாபநாசம். 237. ராகவன், K. S., பம்பாய்-19. 238. ராம்மோகன், P., கோயம்புத்தூர். 239. ராமசாமி, M. N. T. N., அருப்புக்கோட்டை. 240. ராகவன், K., சென்னை-1. 241. ரங்கநாதன், லக்ஷ்மணன், M., எட்டயந்தோட்டம், 242. ராமநாதன், T., விருத்தாசலம். 243. ராஜலக்ஷ்மி, பெங்களூர். 244. ராமன், ராஜம்மாள், அங்கம்மாள், ரங்காதுர்க்கம். 245. ரங்கராஜன், K, கும்பகோணம். 246. ரங்கநாதன், M., மாடம்பாக்கம். 247. ரங்கன், G., திருநெல்வேலி. 248. ரங்கராஜன், S. N., ஸ்ரீரங்கம். 249. ராமமூர்த்தி, N. வீரப்பாண்டி. 250. ராமமூர்த்தி, K.M. சென்னை-17. 251. ராமமூர்த்தி, K., சென்னை-4. 252. ராமலிங்கம், K., உசிலம்பட்டி. 253 ரத்தினராஜ், M.T, கண்டி. 254. ராதாகிருஷ்ணன், சீதாலக்ஷ்மி, S., கொல்லம். 255. ராதாகிருஷ்ணன், M.R., பெண்ணுகடம். 256. ராதாமணி, R., திருச்செங்கோடு. 257. ராமகிருஷ்ணன், K, சென்னை. 258. ராஜகோபாலன், கிருஷ்ணன், V. T. S, புதுக்கோட்டை. 259. ராமசந்திரன், சங்கர், S, சென்னை-7. 260. ரகுபதி, S, மேட்டூர் அணை. 263. ராகவன் A V.. சென்னை-6 264. ராகவன், C.V., போரங்கி. 265.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

பிப்ரவரி '52 கூபன் நெ:

ராமபிரசாத், S., போத்தனூர். 266. ராமசிங்காரம், ராங்கியம். 267. ராமன், A. G., செங்கல்பட்டு. 268. ராமசுப்பிரமணியன், சாரதா, K., தூத்துக்குடி. 269. ராம் மோகன், A., காணுடுகாத்தான். 270. ராமசாமி, S., கண்டி. 271. ராமசாமி, சீனிவாசன், A., டில்லி. 272. ராமசாமி, S., விழுப்புரம். 573. ராமசாமி, M. S., (விலாசம் எழுதவில்லை.) புதுக்கோட்டை. 274. ராமசாமி, பாலாம்பாள், G., சென்னை-24. 277. ராமமூர்த்தி, R., குமாரபாளையம். 278. ராஜ லக்ஷ்மி, P., கோயம்புத்தூர், 279. ராஜலக்ஷ்மி, C V.. கோயம்புத்தூர். 2o0. ரங்கநாதன், K. K., சென்னை-4. 281. ரங்கராஜன், S., திராளா. 282. ராம்தாஸ், V. K., திருப்பராய்த்துறை. 283. ராஜப்பன், V., கோயம்புத்தூர். 284. ராஜன், M N, (விலாசம் எழுதவில்லை.) 285. ரங்கராஜன், P., ஸ்ரீரங்கம். 286. ரங்கையா, M.R., ஆண்டிப்பட்டி. 287. ரங்கசாமி, R., தறந்தாங்கி. 288 ரங்கசாமி, M.T., மங்களக்கரை 289. ராஜ ரத்தினம், C., காரை நகர். 290. ராமராஜ், A. V., கோயம்புத்தூர் 291. ரமணி, K., செங்கம். 292. ரத்தினசபாபதி, V., மருதூர். 293. ரத்தினம், S. K., சூலூர். 294. ரத்தினம், ராமையா, கோபாலன், பரமசிவம், S., சங்கரன், கோபால். 296. ராதாகாந்தன், S, சென்னை-4. 297. ராதாபாய், ராஜகோபாலன், T. S., சென்னை-14. 298. ராதாகிருஷ்ணன், S., மதுரை. 299. ராதாகிருஷ்ணன், S. R., கும்பகோணம். 300. ராயகிருஷ்ணன் K., கும்பகோணம். 301. ராமகிருஷ்ணன், S., ஸ்ரீ வைகுண்டம். 302. ராமகிருஷ்ணன், K. S., புதுடில்லி. 303. ராமகிருஷ்ணன் K. S., திருப்பத்தூர். 304. ராமகிருஷ்ணன், S., பம்பாய்-19. 305. ராஜகோபால், S., பாளையங்கோட்டை. 306. ராஜகோபால், சூரிய நாராயணன், காந்தாபாய், S., திருச்சிராப்பள்ளி. 307. ராஜகோபான், பாலசுப்பிரமணியன், K. N., தஞ்சாவூர். 308. ராஜகோபாலன். R., கோயம்புத்தூர். 309. ராஜகோபாலன், ஹைமாவதி, K., சென்னை-4. 310. ராமானுஜம், S., நாகபுர். 311. ராமசந்திரராவ், M., பம்பாய். 312. ராமசந்திரன், K, கும்பகோணம். 313. ராமசந்திரன், N. R., கடலூர் N. T.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்
இங்கிலீஷ் 1 - ஆம் தேதி
வெளிவரும்.

உங்கள் சந்தாவை
அனுப்பிவிட்டீர்களா?

★★★★★★★★★★★★★★★

பூனை - எலி விளையாட்டு

'எல்கே'

குழந்தைகளே! "ஓடி விளையாடு பாப்பா" என்று பாரதியார் சொன்னது போல நீங்கள் சாயங்கால வேளைகளில் விளையாடுகிறீர்களா? என்ன விளையாடுகிறீர்கள்? கண்ணன் புதிதாகச் சொல்லிக் கொடுக்கும் விளையாட்டுக்கள்தானே? சரி, இதோ ஒரு புது விளையாட்டு!

உங்களில் சுமார் 10 பேர் கைகோத்துக்கொண்டு வட்டமாக நில்லுங்கள். உங்களில் ஒருவன் எலி. அவன் வட்டத்திற்குள் இருக்கவேண்டும். மற்றொருவன் பூனை. அவன் வட்டத்திற்கு வெளியே நிற்கவேண்டும். பூனை எலியைப் பிடிக்க முயற்சிக்குமல்லவா? அதே போல் பிடிக்கவேண்டும். கைகோத்து நிற்பவர்கள் வட்டத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஓடுவதற்கு அநுமதிக்கவேண்டும். ஆனால் பூனை எலியைத் தொடர்வதற்கு எத்தனிக்கையில் வட்டத்தில் உள்ளவர்கள் கையை உயர்த்தியோ, தணித்தோ தடுக்கவேண்டும். ஆனால் காலை வளைக்கக்கூடாது. பூனை எலியைப் பிடித்துவிட்டால் இருவரும் வட்டத்தில் சேர்ந்து நிற்கவேண்டும். மற்ற இருவர் பூனை, எலியாக வேண்டும். விளையாடிப் பாருங்கள். குஷியாக இருக்கும்.

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) 'மூட்டை'



விச்சுவின் குறும்பு

'எனெஸ்' (S. 230)

நான் கூறுகிறேன்:

விச்சு ஒரு துறுதுறுத்தத் தொம்பரை. அப்படியென்றால் வாலில்லா வானரம் என்று அர்த்தம். அந்த விச்சு செய்யும் ஒவ்வொரு காரியமும் பிறருக்குத் துன்பமாகவே முடிந்து விச்சுவிறகு இன்பம் கொடுக்கும். பள்ளிக்கூடத்தில் காலை மணி 10-30 அடிக்கும் வரை அவன் ராஜ்ஜியம்தான்.

விச்சுவுக்குத் தகப்பனார் இல்லை. தாயாரைத் தவிர வேறு சொந்தக்காரர்கள் கிடையாது. அம்மாவுக்குச் செல்லப்பிள்ளை. இவனுடைய அப்பா ராணுவத்தில் வேலை பார்த்து அங்கேயே குண்டு பட்டு இறந்துவிட்டதால் இவனுக்குப் பள்ளிக்கூடத்தில் இலவசப் படிப்பு. முரடன்; பலசாலி; அசட்டுத் தைரியமும்கூட. இவனுக்குப் பள்ளிக்கூடத்தில் பாலன், சோமு என்ற இரு இணை பிரியாத் தோழர்கள். பாலனின் தகப்பனார் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர். சோமு ஒரு நடிகரின் மகன். இவர்களுடன் விச்சு செய்த விஷமத்தை அவனே சொல்வான், கொஞ்சம் கேளுங்கள்.

விச்சு கூறுகிறான்:

"டேய். பாலா! டேய்" என்று நான் கூப்பிட்டேன். பாலன் திரும்பிக்கூடப் பார்க்காமல் போனான். எனக்குக் கோபம் வந்துவிட்டது. "டேய் மண்டு! பாலு! வாலு!" என்று பெரிதாகக் கூவினேன். பாலன் கோபத்துடன் திரும்பிப் பார்த்தான். நான் கூப்பிடுவதைக் கண்டதும் பேசாமல் நின்றான். நான் அவன் அருகில் சென்று, "ஏண்டா, கூப்பிடக் கூப்பிடப் பேசாமல் போகிறாய்!" என்றேன்.

"டேய், விச்சு! இந்தத் தடவை கால் பரீக்ஷையில் கணக்கிலே 60 மார்க்கு வாங்கினால்தான் எங்கப்பா தீபாவளிக்குப் பட்டாஸ் வாங்கித் தருவாராம். எப்படிடா நான் கணக்கிலே 60 மார்க்கு வாங்கப் போறேன்?" என்றான் பாலன்.

"இதுக்காகவாடா இத்தனை யோசனை? நான் - இந்த விச்சு- இருக்கிறபோது உங்களுக்கெல்லாம்

என்னடா கவலை? இப்போது ஜாலியா வாடா, போகலாம்!'' என்றேன். பாலன் முகத்தில் சிறிது தெளிவு கொடுத்தது. உடனே அவன், "எங்கேடா போகணும்?'' என்றான்.

"போறதுக்காடா இடமில்லை? அட போக்கத்தவனே! இன்னிக்கு வாசுவின் கிரிக்கெட் கிளப்புக்குப் போய், கலாட்டா பண்ணுவோம், வாடா'' என்றேன்.

"சரி'' என்று அதை ஆமோதித்தான் பாலன்.

* * *

"டேய் வாசு! விச்சுவும் பாலுவும் வராங்கடா! இன்னிக்கு விளையாடினாற்போலத்தான்'' என்றான் கிட்டு.

"கிட்டு! இப்போ அவங்களை விரட்டறதுக்கு என்னடா செய்யறது?'' என்றான் வாசு. வாசு பணக்காரர் வீட்டுப் பிள்ளையானாலும் நோஞ்சல் பேர்வழி.

"இன்னிக்கு என்ன ஆனாலும் பார்த்துடறதடா'' என்றான் கிட்டு. அதை மீதியுள்ளோர் ஆமோதித்தார்கள். இவ்வளவும் எனக்குக் காதில் விழுந்தது.

இதற்குள் நானும் பாலனும் அவர்களிடம் வந்துவிட்டோம். என்னையும் பாலனையும் முறைத்துப் பார்த்தார்கள் அங்குள்ள யாவரும். நான் இதையெல்லாம் கவனிக்காதவன்போல் கிட்டுவை நெருங்கி, "டேய்! என்னையும் சேர்த்துக்கோடா'' என்றேன்.

கிட்டு என்னைச் சிறிது நேரம் முறைத்துப் பார்த்துவிட்டு, "சொந்தக்காரனைக் கேள்'' என்றான். பந்து மட்டைக்கு எல்லாம் வாசுவே சொந்தக்காரன். இதை நான் புரிந்துகொண்டு, "டேய் வாசு! என்னைச் சேர்த்துக்க மாட்டே?'' என்றேன் சிறிது அதிகாரத்தோடு.

"நான்!...நான்...'' என்று சிறிது இழுத்தான் வாசு. நான் அவனை முறைத்துப் பார்த்தேன். "சரி...'' என்று இழுத்தான் வாசு.

சிறிது நேரத்தில் "டீம்'' பிரிக்கப்பட்டு விளையாட்டுத் தொடங்கியது. கொஞ்சம் நேரம் ஒழுங்காக விளையாடினேன். பிறகு ஏதோ நினைவு வந்தது. உடனே என் முகம் மாறுதல் அடைந்தது. சந்தோஷத்தினால்தான்! நான் உடனே வாசுவிடம், "டேய், தண்ணி குடிச்சுட்டு வரேன்''

போலீஸ் இன்ஸ்பெக்டர்: என்ன குப்பா, கூட்டத்தின் மேடையில் கல்லை விட்டெறிந்து கலாட்டா செய்தாயாமே?

குப்பன்: கலாட்டா செய்யலீங்களே! அங்கே மேடையிலே இருந்தவரு ஆளுக்கு ஒரு ஓட்டைப் போடுங்கன்னு சொன்னாரு. அவரு சொன்னபடியே எம் பக்கத்திலே கிடந்த ஓட்டை எடுத்துப் போட்டேன். —குமாரி.

என்று கூறிவிட்டு, சிறிது தூரத்தில் விளையாடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாலனின் கையைப் பிடித்துத் தர தரவென்று இழுத்துக் கொண்டு வாசுவின் வீட்டை நோக்கி ஓடினேன்.

சிறிது நேரத்தில் வாசுவின் வீட்டுக் 'கேட்' அருகே நின்று வாசுவைக் கூப்பிட்டேன். வாசு வீட்டில் இல்லையென்பது எனக்குத்தான் தெரியும். அதனால்தான் தைரியமாக இரைந்து கத்தினேன்.

"யார் அது? விச்சுவா?" என்றுக் கேட்டுக்கொண்டு கேட் அருகில் வந்தான் வாசுவின் அண்ணா ராமு.

"ஆமாம்...! வாசு இல்லையா? அவன் கிட்டே ஒரு சமாசாரம் சொல்லணும்..." என்று இழுத்தேன் நான்.

"ஏன்? எங்கிட்டே சொல்லக் கூடாதோ?" என்றான் ராமு.

"இல்லே இல்லே. வாசு பேனவைப் பள்ளிக்கூடத்திலே வச்சுட்டு வந்துட்டான். கொடுக்க வந்தேன். அவன்தான் இல்லையே!" என்றேன்.

"என்னிடம் கொடுடா அதை!" என்றான் ராமு. "சரி" என்று அரை மனத்துடன் கொடுப்பது போல் பாவனை செய்து, ராமுவிடம் கொடுத்தேன்.

திரும்பி வரும் வழியில், "என்ன வேலைடா இது!" என்றான் பாலு.

"இதோட ரிஸல்டை நாளைக்குப் பார்" என்றேன் நான்.

"ஏண்டா வாசு, இப்படி இருக்கே? சினிமாக் கொட்டகையிலே கடைசி டிக்கெட் எடுத்தாப்பலே!" என்று நான் மறுநாள் வாசு பள்ளிக்கூடம் வரும் பொழுது கேட்டேன்.

"ஒண்ணுமில்லையே!" என்றான் வாசு.

"ஏண்டா மூஞ்சியைப் பார்த்தாலே தெரியல்லியா? பார்க்கர் பேனவைப் பறி கொடுத்தவன் பல்லிளிக்கிறாப்போலே இருக்கே!" என்று அடுக்குத்தொடரில் சொன்னேன்.

"டேய்! அதுதாண்டா காரணம். நேத்திக்குப் பேனவைத் தொலைச்சுட்டேண்டா! புதுசுடா! தெரிஞ்சா எங்கப்பா நிச்சயம் உதைப்பார்டா?" என்றான் வாசு கண்ணில் நீர் தளும்ப.

"டேய்! இதேபோலத்தாண்டா நானும் என் 'எவர்லாஸ்'டைத் தொலைச்சுட்டேன். ஆனா பக்கத் தூரிலே ஒரு சின்ன சாமியார்

பெரியவர்: இந்தப் பத்திரிகையில் என் மாதிரியே ஏதோ வந்திருக்கிறது என்று உன் சிநேகிதன் சொன்னானே. அப்படி ஒன்றையும் காணோமே!

பையன்: சிடுமூஞ்சி என்று ஒரு கதை இருக்கிறதே, அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறான், மாமா!

—ராமுலு.

இருக்கார்டா. அவர் மை போட்டுப் பேனா இருக்கிற இடத்தை 'டான்'னு சொல்லிட்டார்டா" என்றேன் நான்.

"என்னை அவர் கிட்ட அழைச்சிண்டு போடா!" என்று கெஞ்சினான் வாசு. சிறிது நேரம் நான் 'பிகு' செய்தேன். பிறகு, "சரி, அழைச்சிண்டு போறேன். ஆனால் சாமியாருக்குத் தட்சிணை ஐந்து ரூபாய் கொடுக்கணுமே" என்றேன் நான்.

"பேனா விலை முப்பது ரூபாய். நாங்க வாங்கறதுக்குப் பணம் இல்லை. இப்போ தீபாவளிக்குன்னு ஐந்து ரூபாய் சேர்த்திருக்கேன். அதைத்தான் எடுத்தாகணும்" என்றான் வாசு.

மறுநாள் மாலை மணி நான்கு. நான், பாலன், வாசு மூவரும் பக்கத்தூர் பாழ் அடைந்த கோவிலுக்குள் சென்றோம். அங்கே ஒரு சாமியார் நிஷ்டையில் ஆழ்ந்திருந்தார். நாங்கள் அவர் அருகில் சென்று, "சுவாமி" என்று கூப்பிட்டோம். அவர் நிஷ்டை கலைந்து எங்களைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தார். "சுவாமி! உங்களை ஒரு விஷயம் கேட்க வந்திருக்கிறோம் நாங்கள்" என்றேன் நான். எங்களையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த சாமியாரின் முகம் திடீரென்று பயத்தினால் வெளுத்தது. பின்னால் காலடி ஓசை கேட்க, நாங்கள் திரும்பிப் பார்த்தோம். என்ன ஆச்சரியம்! பாலனின் தகப்பனார் போலீஸ் இன்ஸ்பெக்டர் நின்றுகொண்டிருந்தார். என் முகம், பாலனின் முகம், சாமியாரின் முகம் எல்லாம் ஏக காலத்தில் பயத்தினால் வெளுத்தது.

இன்ஸ்பெக்டர் அந்தச் சாமியாரிடம் சென்று அவன் கைகளில் விலங்கு மாட்டினார். "டேய் பாலா! உன் சிநேகிதர்களை அழைத்துக்கொண்டு வாடா சீக்கிரம் வீட்டுக்கு" என்றார் அவர்.

நான் பாலனிடம், "டேய் சோமு மாட்டிக்கிட்டாண்டா!" என்றேன்.

பாலன் "ஆமாம்டா" என்றான். ஆனால் அதற்குள் சோமுவே ஒரு பையைத் தூக்கிக்கொண்டு அங்கே வந்தான்!

"டேய்! எப்படிடா தப்பிச்சே!" என்றேன் நான்.

என்னைப் பார்த்த உடனே சோமு நடுங்கிக்கொண்டே, "டேய் விச்சு! நீ இன்னிக்கிக் கார்த்தாலே தானேடா வந்து சாமியார் வேஷம் போட்டுக்கச் சொன்னே. வாசுவை வெச்சு, பரீக்ஷையில் பாலனுக்குக் காண்பிக்கும்படி சொல்லி, அஞ்சு ரூபாய் வாங்கிண்டு சினிமாவுக்குப் போகலாம்னு சொன்னே? நான் சாப்பிட்டுப் படுத்தவன் இப்போ தாண்டா எழுந்தேன்" என்றான் மூச்சு விடாமல்.

"இதோ இருக்குடா சாமியார் வேஷத்து உடைகள்" என்று பையிலிருந்து சாமியார் வேஷத்துக்கு வேண்டிய உடைகளை எடுத்தான். ஆனால் இதற்குள் பாலன், "எல்லோரும வாஙகடா போவோம்.



எங்கப்பா உங்களையெல்லாம் அழைச்சுக்கொண்டு வரச்சொன்ஞர்டா'' என்ருன்.

பிறகு நாங்கள் நால்வரும் பாலன் வீட்டுக்குச் சென்று அங்கு அவரைக் காணுததால் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருேம். அங்கே ஒரு போலீஸ்காரன் அந்தச் சாமியாரை அடித்து கொறுக்கிக் கொண்டிருந்தான். மற்ருெரு போலீஸ்காரன் எங்களை அழைத்துச் சென்று பாலனின் அப்பா முன் நிறுத்திஞன். அவர் எங்களைப் பார்த்துவிட்டுச் சிறிது நேரம் சும்மா இருந்தார். பிறகு என்னை அழைத்து முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, "பலே பயலடா நீ! எப்படியோ கேடி கந்தஸ்வாமியைப் பிடிச்சுக் கொடுத்துட்டே. நீ பாலனோட நேத்திக்குப் பேசி, யோசனைப் பண்ணினதைப் பார்த்துட்டு, 'சரி இந்தப் பயலை நாளைக்கு மிரட்டுவோம்'னுட்டு அங்கே வந்து சாமியார் வேஷம் போட்டிருந்த சோமுவை அழைச்சிண்டு வரலாம்னு பாத்தா, அங்கே கேடி கந்தசாமி இருக்கான்! அவனைப் பிடிச்சதற்காக எனக்குச் சம்பளம் உன்னுலே உயரப் போறதுடா!'' என்ருர் உற்சாகத்துடன்.

உடனே நான், "சார்! நான் இன்னிக்கு உங்களை ஒரு பதில் உபகாரம் கேட்கப் போகிறேன். அதாவது பாலன் கணக்கிலே 60 மார்க்கு வாங்காட்டாலும் அவனுக்குத் தீபாவளிப் பட்டாஸ் வெடிகள் வாங்கித் தரணும் நீங்க!'' என்று ஒரு போடு போட்டேன்.

ஸ்டேஷனை விட்டு நாங்கள் எல்லோரும் வெளியே வருகிறபொழுது எல்லார் முகத்திலும் புன்முறுவல் தவழ்ந்தது.

வரதனின் டைரி

அன்றைத் தினம் உபாத்தியாயர் சரித்திர பாடம் சொன்ஞர். கடைசியாக ராஜாஜியைப்பற்றிச் சொல்லும்போது, "ராஜாஜி தினம் டைரி எழுதுவார். நீங்களும் டைரி எழுதுவது நல்லது. பழைய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம்'' என்று சொன்ஞர். வரதன் நேராகப் பள்ளிக்கூடம் விட்டதும் சின்ன டைரி ஒன்று வாங்கிஞன். முதலில் அன்றைத் தேதியைக் குறித்துக்கொண்டு காலையில் தன் தம்பியுடன் சண்டை போட்டது, ராபர்ட் கிளைவ் பாடம் நடந்தது எல்லாம் எழுதிஞன்.

ஒரு மாதம் கழிந்தது. வகுப்பில் வாத்தியார் கேள்வி கேட்க ஆரம்பித்தார். அவர், "டேய் கண்ணு! ராபர்ட்கிளைவ் இந்தியாவுக்கு எப்போது வந்தார்?''

கண்ணன் விழித்தான். வாத்தியார், "மண்டு, ஏறு பெஞ்சி மேலே! யாரது அடுத்த பையன்?'' என்ருர். அடுத்த பையன் வரதன் ஜம்மென்று எழுந்து கொஞ்சங்கூடத் தயங்காமல், "8-12-51-ஆம் தேதி, சார்'' என்ருன்.

"யார் வந்தது?''

"ராபர்ட்கிளைவ், சார்''

"சபாஷ்!''

"நான்தான் தினம் டைரி எழுதறேனே, சார். இது மாத்திரம் இல்லே. 12-12-51 அன்று தாஜ்மஹால் கட்டினது. 20-12-51 அன்று சிவாஜியும் ஒளரங்கசீப்பும் சண்டை போட்டது'' என்று விடாமல் சொல்லிக் கொண்டே போஞன். எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். "மண்டு! நீயும் ஏறு பெஞ்சு மேலே!'' என்ருர் வாத்தியார்.

—ஆர். வி. எஸ். மணியன் (V. 557)

பாவம், பாட்டி!

எஸ். ரங்கநாயகி

1

ராமு, ரவி, கமலி — சிவராமனின் குழந்தைகள்.
பாட்டி: சிவராமனின் தாய்.

(சனிக்கிழமை காலை 8 மணிக்கு ரவி, கமலி, ராமு மூவரும் விளையாடிக்கொண்டிருக்கின்றனர்.)

கமலி: டேய் ரவி, கிரிக்கெட் மாட்ச் நெருங்கிவிட்டதடா.

ரவி: வரட்டுமே. இங்கே யார் போகப்போறா?

க: ஏன், நான்தான் போகப் போறேன்.

ராமு: ஆமாம் பொட்டைக் குட்டி, நீ முதல்லே போ. நாங்க உள்ளே போய்ச் சமைக்கிறோம்!

க: இதோ பார், பொட்டை - கிட்டைன்னு சொன்னே, உன் கண்ணைப் பொட்டையாக்கி விடுவேன், ஜாக்கிரதை. ஏண்டாப்பா, விளையாட்டிலே கூட ஆம்பளை, பொம்பளை வித்தியாசமா?

ர: போறுமே உங்க சண்டை! பணம் இருந்தால்தானே நாம் மாட்ச் பார்க்கப் போகமுடியும்?

க: அதாண்டா சொல்றேன். இந்தத் தடவை அப்பா 'காம்ப்'பிலிருந்து வர இன்னும் இரண்டு மாதம் ஆகும். அப்பா இருந்தால் பணம் வராது. அதனாலே பாட்டியைக் கேட்டு வாங்கிவிடணும்.

ரா: ஆமாம் கமலி, நீ சொன்னது ரொம்ப சரி.

க: ஐயே, வெக்கமில்லாமே பேச வந்துட்டான்.

ர: சரி வாங்க போகலாம்.

(பாட்டி ஜபமாலையை உருட்டியவாறு கண்களை மூடிக்கொண்டிருக்கிறாள். கமலி, ரவி, ராமு வருகின்றனர்.)

க: பாட்டி, பாட்டி, ஏ பா...ட்டீ! பாட்...டீ!

(பாட்டி கண்களைத் திறந்து மறுபடி மூடுகிறாள்.)

ரா: பாட்டீ, பாட் டீபா ட்டீபா... ட்டீபா......

பாட்டி: (கண்களைத் திறந்து) ஏண்டா சனியனே, கத்தறே? டீபா கூடத்திலிருக்கறது தெரியல்லியோ! என்னை ஏன் நச்சுப் படுத்தறே?

க: அவன் டீபா கேக்கலை பாட்டி. பாட்டி, பாட்டி என்று

சேர்த்துச் சொல்லிச் சொல்லி உன்னையே டீபாயாக்கிவிட்டான்.

ர: அதான் வால்மீகி முனிவர் 'மராமரா' என்று சொல்லிச் சொல்லி, ராமராம என்று சொன்னது போல் இவன் பாட்டி பாட்டி என்று சொல்லி உன்னை டீபாயாக்கி விட்டான்.

பா: ரொம்ப சமர்த்துத்தான் போ! (மறுபடி கண்களை மூடுகிறாள்.)

ரா: பாட்டி, தூக்கம் வந்தால் கீழே படுத்துக் கொள்ளேன். ஜபம் செய்வதுபோல் பாவனை செய்வானேன்!

பா: சீ போ, அதிகப் பிரசங்கி! அந்தக் காலத்திலே நான் சிறுசாயிருந்தபோது......

ரா: சரியாப் போச்சு. பாட்டி 'அந்தக் காலத்திலே சிறுசாயிருந்த' கதையை ஆரம்பிச்சுட்டா!

பா: ஏண்டா தறிதலை, உன் வாய் அடங்காது?

க: அவன் கிடக்கிறான், பாட்டி. அவன் ஒரு அதிகப் பிரசங்கி. நான் ஒன்று சொல்லணும் பாட்டி.

பா: சொல்லேண்டி, என் கண்ணே.

க: வந்து...பாட்டி! ரவிக்கு.... கிரிக்கெட்டில்....

பா: என்ன? ரவிக்குக் கிரிக்கட்டியா? எனக்குச் சொல்லவே இல்லையே. கிரிக்கட்டி வந்தால் கண்ணையே ஒரொரு சமயம் கெடுத்துவிடுமே. இங்கே வாடா, ரவி. அதுலே துளி செம்மரத்தையை அரைச்சு விழுதாப் போட்டுடறேன். காத்தாய்ப் பறந்துவிடும். எங்கே கண்ணைக் காட்டு, பார்க்கலாம்!

க: (சிரித்துக்கொண்டே) அவனுக்குக் கிரிக்கட்டியில்லை பாட்டி. கிரிக்கெட் விளையாட்டு இல்லே, விளையாட்டு! அதிலே அவனுக்குப் பிரைஸ்கூட கிடைச்சுதே பாட்டி! நினைவில்லை?

பா: பூ! இதென்ன பிரமாதம்! நான் சிறுசாயிருந்தபோது பாண்டி விளையாடுவேன் பார், எல்லோரும் பிரமிச்சுப்போய்......

ரா: அது கிடக்கட்டும், பாட்டி. நீ பொம்மனாட்டி, பாண்டி விளையாடினே! நாங்க ஆண் பிள்ளைகள், கிரிக்கெட் விளையாடறோம்.

பா: அட, ஆம்பிளை பாண்டி விளையாடக் கூடாதா, என்ன? அந்தக் காலத்திலே நான் சிறுசாயிருந்தப்போ எனக்குக் கல்யாணம் ஆனபோது எனக்கு அஞ்சு வயசு. உங்க தாத்தாவுக்கு எட்டு வயசு. இருவரும் சேர்ந்து போட்டி போட்டுப் பாண்டி விளையாடுவோம். விளையாட்டிலே கூட ஆம்பிளை பொம்மனாட்டி வித்தியாசம் உண்டா?

க: நன்னா பத்துத் தடவை சொல்லு பாட்டி.

ர: அது சரி, பாட்டி. இந்த ஊரிலே கிரிக்கெட் மாட்ச் நடக்கப் போகிறது. அதைப் பார்க்கப் பணம் கொடு, பாட்டி.

பா: நன்னாக் கேட்டேடா! விளையாட்டைப் பார்க்கப் பணம் வேணுமாமே! நல்ல கொள்ளைடா இது! அவா விளையாடுவதைப் பார்க்க நீ எதுக்குடா பணம் கேக்கறே? அப்படிப்பட்ட கொள்ளைக்காரன் யாரடா அவன்?

க: பாட்டி, அவா இங்கிலாந்திலேருந்து பணம் செலவழிச்சு ஆட வரூளே. அப்போ நாம் சும்மா பாக்கமுடியுமா?

பா: ஐயே, அவாளை யார் இங்கே வரச் சொன்னா? இத்தனை நாளாகத்தான் அவா பணம் சுரண்டறான்னு சொல்லி அவாளை விரட்டி

யடிச்சு சுயராஜ்யம் அடைந்தோம். இப்போ திரும்பவும் அவனுக்கே போகணுமா? நல்ல நியாயமடி இது!

க: அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லே, பாட்டி. இந்தப் பணம் நம்ப ஊர்க்காரனுக்கும் போகும். ஒன்றும் அதிகம் வேண்டாம். ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்து விடு.

பா: அதெல்லாம் ஒரு தம்பிடி கொடுக்கமாட்டேன். விளையாட்டைப் பாக்கக் காசு வேணுமாம்! கூலிக்காரனுக்கு ஏழைக்கு நாலு அணு அதிகம் கொடுக்க அழறோம். வேலையில்லாமல் ஆடற சோம்பேறியின் ஆட்டத்தைப் பாக்கக் காசாம்! அந்தக் காலத்திலே இப்படியா......

ரா: பாட்டி, வாசல்லே தயிர்க்காரி வந்திருக்கிருள்!

(பாட்டி போகிருள்.)

க: அப்பாவே தேவலையென்று செய்துவிட்டாள் பாட்டி.

ர: (சிறிது யோசித்து) நாளைக்கு ஒரு உபாயம் செய்யலாமா? (காதில் ஏதோ ரகசியம் சொல்கிருன். பிறகு மூவரும் போகின்றனர்.)

2

(சனிக்கிழமை மாலை பாட்டி ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருக்கிருள். கமலி, ரவி, ராமு மூவரும் வருகின்றனர்.)

க: பாட்டி, ஏ பாட்டி!

பா: என்னடி?

ர: ஒன்றுமில்லே...பாட்டி...

பா: ஒன்றுமில்லேன்ன கூப்பிடுவானேன்?

க: வந்து...பாட்டி...ஒரு நல்ல சினிமா வந்திருக்கு, பாட்டி. அதுக்காக....

பா: சரிதாண்டி, வேலையற்றவளே. சினிமாவாம், சினிமா! உன்னை அடுத்த பெண்கள் அழகாக அடுப்பு மொழுகவும் முத்துமுத்தாக் கோலம் போடறதையும் கத்திக்கொள்றதை விட்டு விட்டு, சினிமாவாம்! அந்த நாளிலே நான்......

ர: அது இல்லே, பாட்டி! எங்க ஸ்கூலிலே அதைக் கட்டாயம் பார்க்கணும்னு சொல்லியிருக்கா.

பா: நல்ல வாத்தியாரடா உங்களுக்கு! சினிமா பார்க்க வாத்தியார் சிபாரிசா? சொல்லிக்கொடுக்க முடியல்லேயோ உங்க வாத்தியாருக்கு? உங்களைச் சினிமா பாக்கச் சொல்லிவிட்டு, வாங்குகிற சம்பளத்தில் தண்டச்சோறு தின்கிருனே உங்க வாத்தியார்?

ரா: ஐயையோ, என்ன பாட்டி, பெரியவாளைப் பழிக்கிறே?

பா: சரிதாண்டா, அவர் உனக்குப் பெரியவர். எனக்கு வயசு எழுபத்திரண்டு. எனக்குச் சின்னவர் தானேடா அவர். அதோடுகூட சினிமா பார்த்தால் கண் கெட்டுவிடும். உங்களுக்கு மூக்குக் கண்ணடி போட்டுக்கணும்னு ஆசையாயிருக்கா? அதில் வரும் கெட்ட பழக்கங்களும் படியும். அந்த

நாளிலே சினிமாவா நாங்க பார்த்தோம்?

க: அதில்லே பாட்டி. நல்ல புராணக் கதையைப் படம் பிடிச்சிருக்கா. பக்த கபீர்தாஸ் கதை. நல்ல கதை. பார்த்தால் நமக்கு நல்லதுதானே?

பா: ஏண்டி, அதை அப்பவே சொல்லப்படாதோ? நானும் வறேன். நாலு பேரும் இன்னிக்கே போகலாம். டிக்கெட்டுக்கு எவ்வளவுடா பணம்?

(எல்லாரும் விழிக்கின்றனர்.)

ரா: சினிமா பார்த்தால் கண் கெட்டு விடும், பாட்டி.

பா: சரிதாண்டா, இந்த வயசுக்கு மேலே இனிமே கண் கெட்டுவிடப்போகிறதாக்கும்! கபீர்தாஸ் கதை ரொம்ப நன்னுயிருக்கும். அந்த நாளிலே எங்க பாட்டி..

க: டிக்கெட் இன்னிக்கு கிடைக்காது, பாட்டி. நீ பணம் இப்போ கொடுத்துவிடு. கிடைச்சப்போ வாங்கலாம்.

பா: வேண்டாண்டி அம்மா! பணம் தொலைந்து விடும். நீ டிக்கெட் கிடைக்கும்போது சொல், தருகிறேன்.

(கமலி, ரவி, ராமு மூவரும் ஒன்றும் புரியாமல் நிற்கின்றனர்.)

ரா: அது கிடக்கட்டும், பாட்டி. நாங்கள் புத்தகம் வாங்கவேண்டும். பத்து ரூபாய் கொடு.

பா: நன்னுயிருக்குடா, இப்பதான் உன் அப்பா கட்டுக் கட்டா நோட்டும், புத்தகமும் வாங்கிக் கொடுத்துட்டுப்போனுன். எவண்டா அந்த வாத்தியார்? என்னை அவனிடம் அழைச்சிண்டு போடா. நான் கேக்கறேன். அந்த நாளிலே எங்க வாத்தியார்.....

க: (மனசுக்குள்) இது எதுடா தொந்தரவாக போய்விட்டது? (இரைந்து) பாட்டி, உன்னை அடுத்தகத்து மாமி கூப்பிடுகிருள்.

பா: இதோ வந்துட்டேன்! (போகிருள்.)

ர: உனக்கும் பெப்பே, உங்கப்பனுக்கும் பெப்பேதான், போ.

க: அடேய், இன்னெரு நாடகம் நடத்திப் பார்க்கலாமாடா? (காதோடு சொல்கிருள்.)

ர: ரைட்! (போகின்றனர்)

3

(மறுநாள் பகல் பாட்டி படுத்துக் கொண்டிருக்கிருள். மூவரும் வருகின்றனர்.)

க: பாட்டி!

பா: ஏண்டி கண்ணே!

க: ஏன் பாட்டி, நீ மட்டும் எங்கிட்டே ரொம்ப ஆசையாயிருக்கே?

பா: ஆசையில்லாமெ பின்னே எப்படி இருக்கணும்?

க: பாட்டி, உன்னைக் கண்டாதான் எனக்கு ரொம்பபிடிச்சிருக்கு. நீதான் நல்லவளா இருக்கே!

ரா: ஆமாம் பாட்டி, நிஜம்மா நீதான் நல்லவள், பாட்டி. அடுத்தகத்து எச்சுப்பாட்டி இருக்காளே, அவ ரொம்ப மூசடு. குழந்தைகளைச் சதா திட்டறு!

ர: குணத்தை விட்டுத் தள்ளுடா! நம்ப பாட்டிக்கு இருக்கும் அழகு தானுகட்டும் அவளுக்கு உண்டா?

பா: (உள்ளம் குளிர்ந்து) அப்போ இருந்த அழகுக்கு இப்போ ஈடாகுமா? அந்த நாளிலே நான் சிறுசாயிருந்தபோது எல்லோரும் என் அழகில் சொக்கிப்போய் தூக்கித் தூக்கிக் கொஞ்சுவா. எங்கம்மா..

க: அழகுமட்டுமில்லே; அழகு இருந்தால் குணம் இருக்காதுன்னு

சொல்லுவா. உங்கிட்டே இரண்டும் இருக்கு.

பா: என்னமோ, அந்த நல்ல குணத்தினலேதானே நான் மனுஷியா ஆனேன். அந்த நாளிலே என் மாமியார் என்னை எப்படிப் படுத்தி வைச்சா தெரியுமா? இப்ப நினைச்சாலும் கஷ்டமாயிருக்கு! சதா திட்டிக்கொண்டே இருப்பாள். எது செய்தாலும் தப்பு.

ரா: ஐயோ பாவம்! அவ மட்டும் இப்போ இருந்தால் நான் அவளுடைய பொல்லாத்தனத்துக்குச் சக்கையா வெளுத்துவிடுவேன், பாட்டி. ஆமாம், எதுக்கு அப்படிச் செய்தா?

பா: அது அவ குணம். நான் சிறுசாயிருந்தபோது உங்க தாத்தாவுக்கு மட்டும் என் மேல் அபார ஆசை. அம்மாவுக்குத் தெரியாமல் என்னிடம் பேசப் பேச வருவார்!

ர: பின்னே வராமலிருப்பாரா? உன் கண் அழகு ஒன்றே போதுமே அவரை மயக்க!

பா: போடா போக்கிரி!

ரா: அவன் சொன்னது நிஜம் தான் பாட்டி. இத்தனை வயசாகியும் கண்கள் அழகாயிருக்கின்றன. நல்ல எடுப்பான மூக்கு.

ர: நல்ல வெளுப்பான உடல்.

க: நல்ல இனிமையான குரல்.

ரா: கிளியை ஒத்த அழகு.

க: குயிலைப் போன்ற குரல்.

ர: மானை ஒத்த குணம.

பா: (சந்தோஷத்துடன்) என்னடா போக்கிரிகளா!

ரா: நிஜமாகத்தான் சொல்கிறோம், பாட்டி! பக்கத்தகத்து விச்சு ரொம்ப ஜம்பமாகத் தன் பாட்டி ஒரு ரூபாய் கொடுத்து விட்டாள் என்று பீற்றிக்கொண்டான். 'எங்க

பாட்டி ஆளுக்கு இரண்டு ரூபாய் கொடுப்பாள் பாரடா' என்று நான் சொன்னேன். அவன் என்னேடு 'பெட்' கட்ட ஆரம்பித்து விட்டான், பாட்டி.

க: ஏன், நம்ப பாட்டி தரமாட்டாளாமோ?

ர: அவனுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்!

ரா: பாட்டி, அவனுக்கு இன்னிக்கிச் சாயங்காலம் ரூபாயை காட்ட வேண்டும், பாட்டி!

ர: அடேய், அவன் கூட அதோ வருகிறான் போலிருக்கே.

பா: அந்த அலமாரியில் ரூபாய் வச்சிருக்கேன். ஆளுக்கு ஒரு ரூபாய் எடுத்துண்டு பாக்கியை வச்சுடுங்கோ. நானும் காபி போடப் போறேன். அந்த நாளிலே எனக்கு.....

க: ...இருந்த தயாள குணமே இப்பவும் இருக்கிறது. (பாட்டி சிரித்துக்கொண்டே போகிறாள்.)

க: நம்ப நாடகம் எப்படி?

ர: பாவம், பாட்டி! முகஸ்துதி கஞ்சனையும் கரந்தவிடும். (மூவரும் போகின்றனர்) [திரை]

பொழுதுபோக்கு

ரு. துளஸிதாஸ்



இடமிருந்து வலம்: *(1)* ஒரு கயிற்றின் உதவியால் பாலர்கள் இதைச் சுழல வைத்து ஆடுவார்கள்; *(4)* இதைக் கண்ட நாய் 'ளொள், ளொள்' என்று குரைக்கும்; *(5)* வேறு ..யில்லாமல் பிச்சையெடுப்பவர்கள் பலர்; *(6)* பரீட்சை சமயத்தில் பையன்கள் பாடங்களை....ப் போடுவார்கள்; *(7)* சிலருக்கு ஒரு கையில் ஆறு ......கள் இருக்கும்; *(10)* சிலர் தம் வீடுகளில் கிளியைப் போல இதையும் வளர்ப்பார்கள்; *(11)* இது என்றால் குதிரை என்று பொருள்; *(12)* சில சினிமாக்களில் கடைசியில் இதைக் காட்டு வார்கள்; *(13)* வெள்ளிக்கு அடுத்த கிழமை; *(15)* இதற்கும் கறிக்கும் வித்தியாசம் உண்டு; *(16)* காற்றடைத்தால் விளையாட லாம்; *(19)* குழந்தைகள் வேண்டாமென்றாலும் சாதத்தை அவற் றின் வாயில்.. ..ப்பார்கள்; *(20)* இது ஒரு தானியம்; *(21)* நம் உடைகளை இதாக வைத்திருக்க வேண்டும்; *(22)* குழந்தைக்குத் தாயார்.

மேலிருந்து கீழ்: *(1)* இந்த ஆசை இருந்தால் நாட்டிற்கு உழைக்க முடியாது; *(2)* இரவுக்கு அடுத்தது; *(3)* மன்மதனின் மனைவி; *(4)* காகத்தின் நிறம்; *(5)* ரேஷன் அரிசியில் இதுவும் இருக்கும்; *(8)* இதைக் கொண்டு மரத்தைத் துண்டு துண்டாக்கலாம்; *(9)* பக லுக்கு அடுத்தது; *(13)* இந்தப் புத்தகத்தில் சிவாஜி, அசோகர் முதலியவர்களைப் பற்றிப் படிக்கலாம்; *(14)* பௌர்ணமியன்று முழு வட்டமாக இருக்கும்; *(17)* இரவில் தனியாகச் செல்ல மனத்தில் இது வேண்டும்; *(18)* இதன் மாவில் ரொட்டி செய்வார்கள்.

(விடைகள் கடைசிப் பக்கத்தில்)

எங்கள் ஊர்

ரா. பாலசுப்பிரமணியம்

(B. 75)

எங்கள் ஊரின் பெயர் கடம்பன்குரிச்சி. இது திருச்சி ஜில்லாவில் கரூர் தாலுக்காவில் உள்ளது.

நீங்கள் சென்னையில்தானே இருக்கிறீர்கள்? முதலில் ரெயிலில் ஏறி நேராகக் கரூருக்கு வாருங்கள். வந்துவிட்டீர்களா! பஸ் ஸ்டாண்டிற்கு ஒரு வண்டி அமர்த்திக்கொள்ளுங்கள்.

வண்டிக்காரன் உங்களை ஒரு கீற்றுக் கொட்டகையின் முன்னால் இறக்கிவிடுவான். இது தானா பஸ் ஸ்டாண்டு என்று மலைக்காதீர்கள். அதுவேதான் பஸ் ஸ்டாண்டு.

பஸ் ஸ்டாண்டில் போய் கடம்பன்குரிச்சிக்குப் போகிற பஸ் எது என்று கேட்டுவிடாதீர்கள்! 'தவுட்டுப்பாளையம்' போகிற பஸ் எது என்று கேளுங்கள். (ஊர்களின் பெயரை நன்ருக நினைவு வைத்துக்கொள்க!) 'ஏதடா, இது! கடம்பன்குரிச்சிக்கு அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டு, தவுட்டுப்பாளையம் போகச் சொல்கிருனே' என்று மலைக்காதீர்கள்! முதலில் நான் சொல்கிறபடி கேளுங்கள்.

தளவாய்பாளையத்திற்கு டிக்கட் வாங்கிக்கொண்டு தவுட்டுப்பாளையம் பஸ்ஸில் ஏறிக்கொள்ளுங்கள். சுமார் அரை மணி நேரம் புழுதி படிந்த ரஸ்தாவில் பிரயாணம் செய்த பிறகு கண்டக்டர் உங்களை ஒரு புளியமரத்தடியில் இறக்கிவிடுவார். அந்த இடத்திலிருந்து நான்கு திசைகளையும் முதலில் கண்டு பிடித்துக் கொள்ளுங்கள். வடபுறமாகச் செல்லும் ரஸ்தாவில் சுமார் அரைமைல் நடந்த பிறகு சில வீடுகளையுடைய ஒரு கிராமம் தெரியும். இதுதான் குன்னிக்காட்டூர்.

சரி, மேலே நடவுங்கள். கிழக்கு முகமாகத் திரும்பும் ரஸ்தாவில் நடவுங்கள். இம்முறை அரைமைல் தூரம் நடந்தபின் முறையே கோவிந்தப்பாளையம், மேட்டுப்பாளையம் முதலிய ஊர்களைக் கடந்து செல்வீர்கள்.

இப்பொழுது ஒரு வாய்க்கால், ஒரு சிறிய பிள்ளையார் கோவில் முதலியன தெரியும். இங்கிருந்து கண்ணை மூடிக்கொண்டு கிழக்கே சுமார் ஒரு மைல் தூரம் வாருங்கள்.

உங்களுக்கு வலது பக்கத்தில் ஒரு கட்டிடமும் இடது புறத்தில் சில வீடுகளும் தெரியும். இது தான் 'எங்கள் ஊர்.' வலது புறத்தில் ஒரு கட்டிடம் தெரிகிறதே, அதுதான் எங்கள் ஊர் ரைஸ் மில்.

சரி, இடது புறமாகத் தெரியும் பாதையில் நடவுங்கள். எங்கள் ஊருக்குள் நுழைந்து விட்டீர்கள். எண்ணற்ற முடக்குகளையும், குடிசைகளையும் கடந்து செல்லவேண்டி வரும். அஞ்சாமல் நடந்து செல்லுங்கள்.

கடைசியாகச் சிறிது விசாலமான ஒரு மைதானத்தை அடைவீர்கள். மைதானத்திற்குப்

பக்கமாக ஒரு சிறு கோவில் இருக்கும். இதுதான் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில்.

வருடந்தோறும் பங்குனி (March) மாதத்தில் இந்தக் கோவிலில் 'தீமித் திருவிழா' நடைபெறும். அதாவது, நீள மாக ஒரு குழி வெட்டி அதில் கட்டைகளைப் போட்டு, காலையி லிருந்து மாலைவரையில் எரிய விட்டுக்கொண்டே இருப்பார் கள். பலர் உப்பையும், வெல் லத்தையும் அதில் போட்ட வண்ணம் இருப்பார்கள். மாலை யில், பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் இதில் இறங்கி நடப்பார்கள். இதற்குத்தான் 'தீமிதித் திருவிழா' என்றுபெயர்.

இந்தக் கோவிலுக்கு வடக்கில் சிறிது தூரத்தில் ஒரு கோபுரம் தெரியும். இதுதான் எங்கள் ஊர் செல்லாண்டியம்மன் கோவில்.

இதற்கு வருடந்தோறும் சித்திரை மாதம் ஐந்தாறு சப்பரங்களை ஜோடித்து ஒரு தேர் கட்டுவார்கள். இந்தத் தேர் கிட் டத்தட்ட ஒரு தென்னை மர உயரத்திற்கு இருக்கும்.

இந்தத் தேரை ஐம்பது பேர்கள் சேர்ந்து தூக்கிக் கொண்டு போவார்கள். எங்கள் ஊரின் கிளைக் கிராமங்களாகிய வரப்பாளையம், மேட்டுப்பாளை யம் முதலிய ஊர்களுக்கு இந்தத் தேர் சென்று வரும்.

இந்தத் திருவிழாதான் எங்கள் ஊரில் மிகப் பெரியது.

எங்கள் ஊரின் செல்லாண்டி யம்மன் கோவிலுக்கு வடக்கில் புண்ணிய நதியான காவேரி ஓடுகிறது. பலர் இதில் குளித் துப் புண்ணியம் அடைவதற் காக ஐப்பசி மாதந்தோறும் வருவார்கள்.

அடடே! உங்களை எங்கள் வீட்டிற்கு அழைத்துப் போகா மல் ஏதோ பேசிக்கொண் டிருக் கிறேனே! வாருங்கள்!

மாரியம்மன் கோவிலுக்கு நேர் எதிரில் ஒரு மேடும் ஐந்தாறு விடுகளும் தெரிகின்றனவே, அது தான் எங்கள் ஊர் அக்கிரகாரம்.

அதோ மூன்று பூவரச மரங் கள் ஒருங்கே நிற்கின்றனவே, அதுதான் எங்கள் விடு!

இதோ எங்கள் வீட்டுக்கு எதிரே இருக்கும் வீடுதான் எங் கள் ஊர் தபாலாபீஸ். இதில் ஒரு பிராஞ்சு போஸ்ட் மாஸ் டரும், ஒரு ரன்னரும் இருக்கின் றனர். கரூரிலிருந்து எங்கள் ஊருக்கு ஐந்து மைலில் இருக் கும் வாங்கல் என்னும் ஊர் வழியாக இங்கே மெயில் வரு கிறது.

தென்னிந்தியாவில் முக்கிய மான 'புகளூர் சர்க்கரைத் தொழிற்சாலை' எங்களுருக்கு நாலு மைல் மேற்கில் உள்ளது.

எங்களூருக்கு வேங்கடரங்க சத்திரம் என்ற பூர்வாசிரமப் பெயரும் உண்டாம். ராமாயண காலத்தில் அநுமார் முதலிய வானரர்கள் மதுவனத்தை அழித் தது எங்கள் ஊரில்தானும்!

மொத்தத்தில் எங்கள் ஊர் சுத்தப் பட்டிக்காடு. நவநாகரிக வசதிகள் ஒன்றும் கிடையாது. கேவலம் ஒரு வாசகசாலையாவது ஒரு 'டூரிங்' சினிமாக் கொட்டகை யாவது கிடையாது. பொழுது போக்குவது மிகவும் சிரமம். ஓர் எலிமெண்டரி ஸ்கூல் இருக் கிறது. அதில் ஓர் உபாத்தி யாயர்தான் இருக்கிறார். முப்பது பையன்கள் வருவதுகூடக் கஷ் டம். இருந்தாலும் எங்கள் ஊரில் வசிப்பது எனக்குப் பெருமை யாகவே இருக்கிறது. பிறந்த மண் பாசம் யாரையும் விடா தல்லவா?

ரேடியோ
புரொபஸர் விஞ்ஞானம்
1
எந்த ஊர் நிகழ்ச்சியைக் கேட்கிறீர்கள்?
திருச்சியில் நடக்கும் நிகழ்ச்சி இங்கே எப்படிக் கேட்கிறது, ஸார்?
திருச்சியில் குழந்தை நிகழ்ச்சி, ஸார்!
2
ஓர் ஊரிலிருந்து டெலிபோனில் பேசினுல் மற்ருேர் ஊரில் கேட்கலாம் என்று உங்களுக்குத் தெரியும் அல்லவா?
ஆம்; சென்னையில் பேசினுல் டில்லி திருச்சி முதலிய ஊர்களில் கேட்கும் என்று தெரியும்.
டெலிபோன் மாதிரியேதானு ரேடியோவும்?
3
சொல்லுகிறேன் கேளுங்கள். திருச்சியில் ரேடியோ நிலையத்தில் ஓர் அறையில் மைக்ரோபோன் என்னும் கருவி ஒன்று வைத்திருக்கும். உள்ளமைப்பில் அது டெலிபோனுடைய டிரான்ஸ்மிட்டரைப் போன்றது. அதற்குள்ளே மெல்லிய தகடும் கரித்தூளும் காந்தமும் இருக்கும். அதைச் சுற்றிக் குழந்தைகளும் நிகழ்ச்சியை நடத்துபவரும் உட்கார்ந்து நிகழ்ச்சியை நடத்துவார்கள். அவர்களுடைய பேச்சும் பாட்டும் கதையும் அங்குள்ள மைக்ரோபோனில் உள்ள தகட்டை அதிரச் செய்கிறது. இந்த அதிர்ச்சி டெலிபோனில் நிகழ்வது போலவே மின் ஓட்டமாக மாறுகிறது.

4
டெலிபோனில் கம்பியின் வழியாக அல்லவா இந்த மின்சார ஓட்டம் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊரை அடைகிறது. ரேடியோவில் டெலிபோன் கம்பிகளைப் போன்ற கம்பிகளைக் காணோமே! மின்சாரசக்தி எப்படி இங்கே வந்து சேருகிறது?
5
குளத்து நீரை என் பந்து மட்டையின் பிடியால் ஆட்டுகிறேன். அலை உண்டாகிறது, பார்!
அந்த அலை இங்கே வந்து விட்டது, கண்ணா! பந்து இதோ ஆடிக் கொண்டிருக்கிறது, பார்!
ஏரியல்
6
குளத்தில் ஒரு படித்துறையில் உள்ள நீரை அசைத்தால், அலைகள் தோன்றிப் பரவி, குளத்தின் எல்லாப் பக்கங்களையும் அடையும். அந்த அலைகள் எதிர்ப் படித்துறையில் மிதக்கும் பொருள்களையும் அசைக்கும் அல்லவா?
அதுபோலவே ரேடியோ நிலையத்திலும் நடக்கிறது. அங்கே உயரமான ஏரியல்களை நிறுத்தியிருக்கிறார்கள். குளத்து நீரில் நீ அலைகளை உண்டாக்கியதுபோல, ரேடியோ நிலையத்திலுள்ள எஞ்சினியர்கள் அங்குள்ள ஏரியல்களால் சதரில் மின்சார அலைகளை உண்டாக்குகிறார்கள். ரேடியோ நிலையத்தில் வைத்திருக்கும் மைக்ரோபோனில் உண்டாகும் மின் ஒட்டங்களில் உள்ள சக்தியை இந்த அலைகளின் மீது ஏற்றி நாலு பக்கமும் பரவச்செய்கிறார்கள்.

7
வான வெளியில் விரிந்து பரவும் அலைகள் ஈதரின் மூலமாக வீட்டிலுள்ள ஏரியலில் வந்து மோதுகின்றன; அதிலுள்ள கம்பியில் மின்சார அதிர்ச்சியை உண்டாக்குகின்றன. அந்த அதிர்ச்சிகள் ஏரியில் கம்பிகள் மூலமாக ரேடியோப்பெட்டியை அடைகின்றன. குளத்தில் மிதந்த பந்தை உன் மட்டையின் அசைவு அதிரச் செய்ததுபோல், இந்த அலைகள் ரேடியோப் பெட்டியில் உள்ள ரிஸீவரின் தகட்டை அதிரச் செய்கின்றன. டெலிபோன் ரிஸீவரில் குரல் எப்படிக் கேட்டதோ, அதைப்போலவே ரேடியோப் பெட்டியிலிருந்தும் குரல் கேட்கிறது
8
தெரிகிறது. டெலிபோனில் கம்பியின் மூலமாக மின்சார சக்தி ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு வருகிறது. கம்பி செல்லும் ஊர்களுக்கு மட்டும் அது போகமுடியும். ஆனால் ரேடியோவில் ஈதரில் உண்டாகும் அலைகளின் மூலமாக எல்லாப் பக்கங்களிலும் பரவிச் செல்கிறது. எந்தத்திசையிலும் ரேடியோப் பெட்டியின் மூலமாக அதைக்கேட்கமுடியும்.
9
டெலிபோனில் பேசினால்காதோடு காதாகக் கருவியை வைத்துத் தான் கேட்க முடியும். ரேடியோவில் தக்க கருவிகளால் பேசுபவனுடைய குரலை மிகப் பெரிய கூட்டத்துக்கும் நன்றாகக் கேட்கும்படி செய்யலாம்.



இதை ஒருவரும் ஒரேயடியாகக் கண்டு பிடித்துவிடவில்லை. மின்சார சக்தியை ஈதரில் அலைகளின் மூலமாகச் செலுத்த முடியும் என்று முதன் முதலில் அறிவித்தார் கிளார்க் • மாக்ஸ்வெல் என்னும் ஆங்கிலேயர். அதற்கு இருபது வருஷத்துக்குப்பிறகு ஹெர்ட்ஸ் என்னும் ஜெர்மானியர் தக்க கருவிகளை அமைத்து அவ்வகை அலைகளைத் தமது சோதனைச் சாலையில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பரவச் செய்தார். பின்பு இத்தாலி நாட்டினரான மார்க்கோனி என்பவர் படிப்படியாக முயன்று, மிகவும் உயரமான ஏரியல்களை அமைத்து, இங்கிலாந்திலிருந்து வட அமெரிக்காவிலுள்ள நியூபௌன்ட்லாந்துக்கு மின்சார அலைகளை எட்டும்படி செய்தார். பின்பு பிளெமிங் என்னும் ஆங்கிலேயரும், டிபாரெஸ்டு என்னும் அமெரிக்க நாட்டினரும் ரேடியோ வால்வு என்னும் கருவியைக் கண்டுபிடித்துச் சீர்திருத்தினார்கள்.

அதன் பிறகுதான் குரலை ரேடியோவின் மூலம் அனுப்ப முடிந்தது.



11

1912-ஆம வருஷத்தில் ‘டிட்டானிக்’ என்னும் மிகப் பெரிய கப்பல் அட்லாண்டிக் சமுத்திரத்தில் பனிமலையில் மோதி மூழ்கிப் போயிற்று. அப்போது ரேடியோவின் மூலமாகச் செய்தியை அறிந்த ‘கார்ப்பேத்தியா’ என்னும் கப்பல் அதிலுள்ள பிரயாணிகளில் 706 பேர்களைக் காப்பாற்றிற்று.

ஞாபகத்தில் இருக்கட்டும்!

1. வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு நீந்தக் கூடாது. ஒரு மணி நேரமாவது ஆகவேண்டும். இல்லாவிட்டால் அஜீர்ணம், வாந்தி, மார்பு வலி, பிடிப்பு-இப்படி ஏதாவது ஏற்படும்.

2. பரந்த நீர்நிலைகளில் துணையின்றி வெகுதூரம் நீச்சலடிக்காதே. பாதியில் கால், கை களைத்துப் போனால் ஆபத்து.

3. பந்தோபஸ்து இல்லாத நீர்நிலைகளில் காற்றடைத்த ரப்பர் டியூப் முதலிய போலி ஆதாரத்தை வைத்துக்கொண்டு நீந்தாதே.

4. வெடவெடவென்று நடுக்கும் குளிரில் ஐஸ்போன்ற தண்ணீரில் நீந்தாதே.

5. ஆறு, ஓடை முதலியவற்றில் எதிர் நீச்சுப் போடாதே. கூடுமான வரையில் தண்ணீர் ஓட்டத்துக்கு இசைய, சாய்வாகவே நீந்திப் போ. வெள்ளப் பெருக்கை எதிர்க்க முயலாதே.

6. தடுக்கும்படி ஆடைகளை உடுத்துக் கொண்டு நீந்தாதே. படகிலிருந்து தவறி விழுந்துவிட்டாயானால் முதல் காரியமாகப் போட்டிருக்கும் மேல் ஆடைகளைக் கழற்றிவிடு. நீந்தத் தெரிந்தவர்கள் தண்ணீரில் மிதந்தபடி இதைச் செய்ய முடியும்.

7. புதிய இடங்களில் போய் முன் பின் தெரியாமல் நீந்தாதே. தண்ணீருக்கடியில் பாறை இருக்கும். மரக்கட்டைகளை ஊறப் போட்டிருப்பார்கள். ஆகவே ஜாக்கிரதையாகத் தெரிந்துகொண்டு நீந்தத் தொடங்கு.

8. உல்லாசப் படகுகளிலோ, தோணிகளிலோ, கட்டுமரங்களிலோ தனியாகக் குழந்தைகளைப் போகும்படி விடாதே. பெரியவர்கள் கூடப்போனால் கூட காற்றடைத்த ரப்பர்க் குழாய் முதலியவற்றை முன்னெச்சரிக்கையாகக் கையோடு வைத்திருக்க வேண்டும்.

நீச்சல் பழக்கம்

நீந்தக் கற்றுக்கொள்வது அபாயகரமான பயிற்சி என்றுதான் உடனே எண்ணத் தோன்றுகிறது. ஆனால் சற்று யோசித்துப் பார்த்தால் சாதாரணமாக எல்லாருக்கும் தெரிய வேண்டிய பயிற்சி அது என்பது புலப்படும். நீச்சல் ஒரு தேகப் பயிற்சி; அத்துடன் ஆபத்துக் காலத்தில் உதவக் கூடியது. அதை முறையாகக் கற்றுக்கொள்வதானால் நல்லதுதான். ஆகையால் பெரியவர்களின் மேற்பார்வையில் அவர்களின் உதவிகொண்டு இதைக் கற்றுக்கொள்ளவேண்டும். சிறுவயதில் கற்றுக் கொள்வது சுலபம். ஒரு முறை கற்றுக்கொண்டால் பிறகு அது மறக்காது.

தண்ணீர் என்றாலே எல்லாருக்கும் பயம்தான். நீச்சல் கற்றுக் கொள்ளத் தொடங்கும்போது கையும் காலும் சொன்னபடி கேட்காது; தாறுமாறாக இழுக்கும். பெரும்பாலும் இதற்குப் பயம் தான் காரணம். உடம்புக்குப் பயிற்சி கொஞ்சம் இருந்தாலே போதும்; நீந்தக் கற்றுக் கொண்டுவிட முடியும்.

மிருகங்களுக்கு நம்மைப்போல் தண்ணீரிடம் பயம் இல்லை. அதனால் முதல் தடவையிலேயே அவை தண்ணீரில் இறங்கினதும் நீந்தத் தொடங்கிவிடுகின்றன. நாமும் அவ்விதம் இருந்தால் அநேகமாக எல்லாருக்குமே நீந்தத் தெரிந்துவிடும். நமக்குப் பயம்; நீந்தக் கற்றுக்கொண்டால்தான் அந்தப் பயம் விலகும். கற்றுக்கொண்ட பிறகும் அள

வுக்கு மீறி, தண்ணீருடன் விளையாடாமல் இருப்பதே நல்லது.

ஆரம்பப் பயிற்சி

1. மார்பளவுத் தண்ணீரில் சிறுவனின் இரண்டு கைகளையும் பிடித்து முதலில் நடத்திப் பழக்க வேண்டும்.

2. இரண்டு கைகளாலும் பிடித்துத் தூக்கிக்கொண்டால் சிறுவன் தண்ணீரில் காலால் உதைத்துக்கொள்ள முடியும்.

3. தண்ணீரைக் கண்டவுடன் ஏற்படும் பயம் கொஞ்சம் கொஞ்சம் விலகியவுடன் கையை விட்டு விட்டு நிற்கச் செய்யவேண்டும்.

4. கற்றுக் கொடுப்பவர் நாலு அடி தள்ளி நின்றுகொண்டு, பையனைத் தத்தித் தத்தி நடந்து வரச் சொல்லவேண்டும்.

5. தண்ணீரினுள் மூச்சுவிட முடியாது; ஆகவே, சிறுவன் மூச்சை அடக்கப் பழகுவான். அதற்கு ஆசிரியர் சிறுவனுடைய இடுப்பில் கையை வைத்துக் கொண்டு நீச்சல் நிலையில் தாங்கிப் பிடித்துக்கொள்ள வேண்டும். வாயை மூடிக்கொண்டு மூச்சை அடக்கப் பழகுவதுடன் நீச்சல் நிலையும் பழக்கமாகும்.

6. இரண்டு மூன்று கஜ தூரத்தில் ஆசிரியர் நின்றுகொண்டு நடந்து வருவதற்குப் பதிலாகத் தண்ணீரில் பாய்ந்து வரச் சொல்லவேண்டும்.

7. தண்ணீரில் நின்றபடியே முதுகை வளைத்து முகத்தை நிமிர்த்திச் சாய்க்கவேண்டும்.

8. தண்ணீரில் மிதக்கக் கூடிய நிதானம் ஏற்பட்டுவிட்டது தெரிந்ததும், ஆசிரியர் பக்கத்தில் கையை விட்டுவிட்டுக் கவனிக்கவேண்டும்.



கேட்டீர்களா!

பஞ்சாபின் புதிய தலைநகர்

15 கோடி ரூபாய்ச் செலவில் பஞ்சாப் ராஜ்யத்துக்கு ஒரு புதிய தலைநகரை நிர்மாணிக்கப் போகிறார்கள். ஷிவலாக் குன்றுகளின் அடிவாரத்தில் உள்ள சாந்திகார் என்ற கிராமத்தையே ஐந்து ஆண்டுகளில் அடியோடு மாற்றி அமைக்கப் போகிறார்கள். சர்க்கார் கட்டிடங்களும் அழகிய வீடுகளும் நிலவறைச் சாலைகளும் கொண்ட ஒப்புயர்வற்ற நகரமாகச் சாந்திகார் விளங்கும். செங்கல் நகராக இருந்த ரோமாபுரியைப் பளிங்கு நகராக அகஸ்டஸ் சக்கரவர்த்தி ஆக்கினார். அதேபோல எளிய குடிசைகள் நிறைந்த சாந்திகார் கிராமத்தை ஒளியும் வெளியும் அமைதியும் நிறைந்த அற்புதமான நகரமாக்கப் பல தேசத்துச் சிற்பிகள் வந்திருக்கிறார்கள். சாந்திகார் நகரில் ஒவ்வொரு பிரிவிலும் தனித் தனியாகக் கடைத் தெருவும் சுகாதார நிலையமும் பாடசாலைகளும் சினிமாக்களும் சங்கங்களும் குழந்தைகள் விளையாடவும் உலாவவும் நந்தவனங்களும் இருக்குமாம். உலகத்திலேயே தலைசிறந்த நகரமாக இது விளங்குமாம்.

சொறி, சிரங்கு

சொறி, சிரங்கு வராமல் இருக்க வைட்டமின் 'சி' உணவுப் பொருளில் அதிகம் சேரவேண்டும். ஆரஞ்சுப் பழம், எலுமிச்சை, தக்காளி, முட்டைக்கோஸ், காலிபிளவர், கீரை வகைகள் இவற்றில் வைட்டமின் 'சி' என்ற சத்துப் பொருள்கள் அதிகமாக உண்டு. அன்றாடம் உணவில் இவற்றைச் சேர்த்து வரவேண்டுமென விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

குடியரசு நாள்

ஜனவரி 26-ஆம் தேதி இந்தியாவின் சரித்திரத்தில் ஒப்புயர்வற்ற நாள். நீண்ட நாள் நடத்திய அரசியல் போராட்டத்துக்குப் பிறகு இந்தியா பரிபூரண சுதந்தர நாடாகியது. பூரண அரசுரிமை பெற்ற குடியரசு நாடாக 1950-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26-ஆம் தேதி அது ஆயிற்று. சென்னையில் தீபாலங்காரங்களும் கொடியேற்று விழாக்களும் இந்த வருஷம் கொண்டாடப்பட்டன. துறைமுகத்தில் வந்திருந்த ஜம்மு, சட்லெஜ், டிர் என்ற போர்க் கப்பல்களை விமரிசையாக அலங்கரித்திருந்தார்கள்.

கோலார் தங்க வயலில் விபத்து

கோலாரிலுள்ள 4 சுரங்கங்களில் ஒன்றில் 'சாம்பியன் ரீப்' என்ற பாறை வெடித்துப் பெரிய விபத்து ஏற்பட்டுவிட்டது. சுரங்க வாயிலை ஸீல் போட்டு மூடிவிட்டார்கள். இந்தப் பாறை வெடித்த சத்தம் 10 மைல் தூரம் கேட்டதாம். மாதாகோயில் உள்பட பல கட்டிடங்கள் இடிந்து விழுந்துவிட்டன.

ஒலிம்பிக் விளையாட்டுக்கள்

சென்னை ராஜ்ய ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஜனவரி 28-ஆம் தேதி முதல் பிப்ரவரி 2-ஆம் தேதி வரையில் கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் நடக்கும். இந்தப் போட்டிப் பந்தயங்களில் 700 பேர்களுக்குமேல் கலந்துகொள்வார்கள்.

நான் விரும்புகிறேன்

விடுகதை

பாவாடை உடுத்திருக்கும் பாவையில்லை;
பருத்தசிறு தொந்தியுண்டு செட்டியில்லை;
சுருண்டிருக்கும் வாலுமுண்டு சுணங்கனில்லை;
சுவையாகக் கறிக்குதவும் செப்புவீரே!

—K. J. V.

விடை: கத்திரிக்காய்

* * * * *

என் பேர் என்ன?

என் முதல் எழுத்து இளநீரில் உண்டு; தேங்காயில் இல்லை.
என் இரண்டாவது எழுத்து, கலாசாலையில் உண்டு; பள்ளிக்கூடத்தில் இல்லை.
என் மூன்றாவது எழுத்து அம்பில் உண்டு; வில்லினில் இல்லை.
என் நாலாவது எழுத்து அப்பாவில் உண்டு; அம்மாவில் இல்லை.
என் கடைசி எழுத்து சுள்ளியில் உண்டு; குச்சியில் இல்லை.
என் பெயர் என்ன?

—N. 50.

(விடை கடைசிப் பக்கத்தில்)

* * * *

மூளைக்கு வேலை

5	5	5
5		5
5	5	5

எழுதப் படிக்கத் தெரியாத ஒரு தனவந்தர் தம் குதிரைகளைப் படத்தில் காட்டியபடி கட்டி, எந்தப் பக்கம் கூட்டினாலும் 15 வரும்

படி செய்தார். பிறகு காசாரியிடம் ஒப்படைத்துவிட்டு வேறு ஊருக்குப் போனார்.

காசாரி பலே கைகாரன். அவன் 4 குதிரைகளை விற்றுவிட்டான். ஆனால் சாமர்த்தியமாக எந்தப் பக்கம் கூட்டினாலும் 15 வரும்படி குதிரைகளைப் பிரித்துக் கட்டிவிட்டான்.

திரும்பி வந்த தனவந்தருக்குக் குதிரைகள் குறைந்திருக்கிறது என்று மட்டும் தெரிந்தது. ஆனால் கூட்டிப் பார்த்தால் 15 வருகிறது. காசாரி எப்படிக் கட்டியிருப்பான்?

—அ. ஜான் தேவதாஸ்.

(விடை கடைசிப் பக்கத்தில்)

* * *

வேடிக்கைக் கணக்கு

ஒரு தெப்பக்குளத்தில் நிறையப் படிகள் இருந்தன. அதில் இரண்டு இரண்டு படிகளாக இறங்கினால் ஒன்று மீதம் வரும். மூன்று மூன்று படிகளாக இறங்கினால் இரண்டு மீதம் வரும். நான்கு நான்கு படிகளாக இறங்கினால் மூன்று மீதம் வரும். ஐந்து ஐந்து படிகளாகத் தாண்டினால் நாலு மீதம் வரும். ஆறு ஆறு படிகளாகத் தாண்டினால் ஐந்து மீதம் வரும். அப்படியானால் மொத்தப் படிகள் எவ்வளவு?

—K. 71.

(விடை கடைசிப் பக்கத்தில்)

* * * *

நான் நினைப்பதுண்டு—

ஒவ்வொரு தேசத்துக்கும் ஒவ்வொரு சந்திரன் தனியாக இருந்தால் என்ன ஜோராக இருக்கும்!

—E. ஜார்ஜ் (G. 69)

பறவைகளைப் போல நமக்கும் பிறக்கும்போதே இறக்கைகள் இருந்தால் ஆனந்தமாய்ப் பறந்து வரலாமே!

—ஏ. சக்கு. மதுரை (S. 484)

சைனா பஜார் என்றால் சைனாக்காரர்கள் வைத்திருக்கும் கடைகளாகவே இருக்குமோ?

—கே. ஆர்., மந்தைவெளி.

ரோஜாப்பூ எப்படி கம்மென்று வாசனை வீசுகிறது? அதேபோல நான் வந்தாலும் ஒரே வாசனையாக இருக்கவேண்டும்.

—ஆர். கல்பகம், பங்களூர் (K. 963)

ரெயில் எஞ்சினையும் ஏரோப்ளேனையும் கண்டுபிடித்தவர்களைப் போல நானும் புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்தால் என்ன?

—மு. சாமிநாதன், மாதுங்கா.

* * * *

புரியவில்லை

ஆசிரியர் அவர்களுக்கு, நமஸ்காரம்.

எங்கள் ஊரில் உள்ள அங்கத்தினர்கள் தாங்கள் உபதலைவராகவோ, காரியதரிசியாகவோ, பொக்கிஷதாரராகவோ வரவில்லையே

என்று பதவி வேட்கை கொண்டு அலைகின்றனர். கூட்டம் போட்டால் வருவதில்லை. இதற்கு என்ன வழி என்றே புரியவில்லை.

—M. F. ஜார்ஜ், உபதலைவன், க. பி. கழகம், மதுராந்தகம்.

வந்தவர்களைக் கொண்டு கூட்டத்தை விடாமல் நடத்தினால் தாமே மற்றவர்களும் வந்து கலந்துகொள்வார்கள். ஆ-ர்.)

* * * *

உல்லாசப் பிரயாணம்

"எல்லோரும் நாளைக்கு மகாபலிபுரம் செல்லவேண்டும்; போக விரும்புகிறவர்கள் கையில் மூன்று ரூபாய்ப் பணத்துடன் காலை எட்டு மணிக்குப் பள்ளிக்கூடத்தில் தயாராக இருக்கவேண்டும்'' என்று எங்கள் வாத்தியார் சொன்னதும் எனக்குத் தலைகால் தெரியவில்லை. அவ்வளவுதான்! ஒரே குஷி!

இரவு தூக்கமே வரவில்லை. எண்ணம் எல்லாம் மகாபலிபுரத்தைப் பற்றித்தான். சரியாகக் காலை நாலரை மணிக்கே எழுந்து குளிர்ந்த ஜலத்தில் குளித்தேன். துணியை உடுத்துக்கொண்டு அவசர அவசரமாகப் பள்ளிக்கூடத்துக்கு ஓடினேன். எட்டு மணிக்கு, பஸ்ஸில் எல்லோரும் ஜம்மென்று கிளம்பினோம். வழிநெடுகச் சிரித்துக்கொண்டும் கொம்மாளம் அடித்துக்கொண்டும் சென்றோம்.

மகாபலிபுரத்தில் எல்லாச் சிற்பங்களையும் பார்த்தோம். கொஞ்ச தூரத்தில் ஒரு பசு மாடும் அதற்கு பின்புறம் ஒரு யானையும் படுத்திருந்தன. எனக்கு ஒரே ஆச்சரியம்! ஓடிப் போய்ப் பார்த்தேன். வெறும் கற்சிலை; அவ்வளவு தத்ரூபமாக இருந்தது. சமுத்திரக் கரைக்குக் கொதிக்கும் மணலில் நடந்துபோய்க் கலங்கரை விளக்கத்தைப் பார்த்தேன். கொஞ்சங் கொஞ்சம் இடிந்திருந்தது. ஒரு மலையுச்சியில் ஒரு கல் மட்டும் தனியாகத் தொங்கிக்கொண் டிருந்தது. அது எப்படித் தொங்குகிறது என்று பார்க்கத் துடித்தது என் உள்ளம். பின்னால் வாத்தியார், பையன்கள் ஒருவரும் இல்லை. கொஞ்சம் கூட யோசிக்காமல் விறுவிறுவென்று அவ்வளவு பெரிய மலையில் ஏறினேன். மலையுச்சிக்குப் போய் அந்தக் கல்லின்மேல் ஏறி நின்றேன். அவ்வளவுதான்; அடுத்த கணம் கடகடவென்று பெரிய சத்தம்! கல் உருளத் தொடங்கிவிட்டது.

"ஐயோ, ஐயோ விழறேனே!''

"சேகர், சேகர், ஏண்டா பேத்தறே? ஏதாவது சொப்பனம் கண்டாயா? எழுந்திருடா!'' என்று அம்மா என்னைத் தட்டி எழுப்பினாள். மெதுவாகக் கண்ணை விழித்துக்கொண்டேன். அவ்வளவும் சொப்பனம் என்று பிறகுதான் தெரிந்தது.

எப்படி என் உல்லாசப் பிரயாணம்?

—சேகர்.

* * * *

தீர்மானம்

கண்ணன் மாதப் பத்திரிகையாகையால் ஒரு மாதத்தில் நடக்கும் அரசியல் விஷயங்களின் சுருக்கத்தை விரிவாகவும் தெளிவாகவும் தலையங்கத்தில் முதல் கட்டுரையாக எழுதவேண்டும் என்று இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

REG. No. M. 5542

ஜுபிடரின்

கைதி

கீழ்கண்ட இடங்களில்
இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை
கெயிட்டி
&
தங்கம்

பெங்களூர்	சிவாஜி
”	கெம்பேகௌடா
”	ரூப் மஹால்
மைசூர்	நியூ அபேரா
கோயமுத்தூர்	ஷண்முகா
திருச்சிராப்பள்ளி	வெலிங்டன்
கும்பகோணம்	ராஜா
மாயவரம்	சுந்தரம்
வேலூர்	தாஜ்
காஞ்சீபுரம்	ராஜா
திருப்பாபுலியூர்	பாடலி
பாண்டிச்சேரி	ரத்னா
கூடலூர்	கணேஷ்
திண்டுக்கல்	சோலைஹால்
விருதுநகர்	சென்ட்ரல்
பழனி	விக்டரி
திருவனந்தபுரம்	சித்ரா
கள்ளிக்கோட்டை	கார்னேஷன்
ஏர்ணாகுளம்	பத்மா
திருச்சூர்	ஜாஸ்
நாகர்கோயில்	ஸ்ரீ கிருஷ்ணா
செங்கோட்டை	பத்மநாபா
கொச்சின்	செலக்ட்

டிசம்பர் **28** ௳ முதல்
சேலம் ஓரியண்டல்

பத்திரிகை உலகில் ஒரு புதுமை!

மிட்டாய்

ஆசிரியர்: ராஜன்

குழந்தைகளின் மாதமிருமுறை

32 பக்கங்கள், இரு கலர் அட்டை

சைஸ்: டெம்மி 1×8

விலை 2 அணாதான்

மிட்டாய்: முற்றிலும் கதைகள்! அருமையான கதைகள்! அற்புதமான கதைகள்! துப்பறியும் கதைகள்! ஏராளமான விஷயங்கள்!

ஒவ்வோர் இதழிலும் ராஜன் எழுதும் ஓர் அழகான சிறு நாவல் வெளிவரும். 50 ரூபாய்ப் பரிசுப் போட்டி.

முதல் இதழ் 15-2-52-இல் வெளிவருகிறது

வருஷ சந்தா ரூ. 3

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

'மிட்டாய்'

வெண்ணிலா வெளியீடு

37. அரண்மனைக்காரத் தெரு, சென்னை - 1.

கண்ணன் கிளைக் கழகம்

1. இளையாங்குடி
உபதலைவர்: M. M. அப்துல் கரீம்
பொருளாளர்: S .M. G. ஷேக் தாவூது
செயலாளர்: S. M. முகமது சுலைமான்

15 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு நிறுவப்பட்டிருக்கிறது.

2. செங்கம்
உபதலைவர்: V. M. பிக்ஷேஸ்வரன் (B. 158)
பொருளாளர்: K. சந்தானம்
செயலாளர்: K. தியாகராஜன்

செங்கத்தில் உள்ள கண்ணன் கழக அங்கத்தினர்கள் உபதலைவரை நேரில் சந்திக்கவும்.

3. மணச்சநல்லூர்
உபதலைவர்: அ. ராஜகோபாலன்
பொருளாளர்: இரா. கோபாலகிருஷ்ணன்
செயலாளர்: சு. சமால் முகமது
வாசகசாலை நிர்வாகி: S. கலியபெருமாள்

செயற்குழு 22 பேர் அடங்கியது.

4. வீரவநல்லூர்:
உபதலைவர்: வெ. முத்துசாமி
பொருளாளர்: K. சீனிவாசன்
செயலாளர்: K. வெங்கடசுப்பிரமணியன்
வாசகசாலை நிர்வாகி: R. அனந்தநாராயணன்

செயற்குழு அமைக்கப்படவிருக்கிறது.

5. கல்கத்தா (பெண்கள் தொகுதி)
உபதலைவர்: A. V. பிரபாவதி (P. 151)
பொருளாளர்: G. S. மீனாக்ஷி
செயலாளர்: R. லக்ஷ்மி (L. 35)
வாசகசாலை நிர்வாகி: V. மங்களம் (R. 509)

20 அங்கத்தினர்கள் அடங்கிய செயற்குழுவும் நிறுவப்பட்டிருக்கிறது.

6. கம்பளை, சிலோன்-I
உபதலைவர்: S. P. M. சிவலிங்கம்
பொருளாளர்: S. அழகு
செயலாளர்: S. வள்ளியப்பன்

[illegible] அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

7. கம்பளை, சிலோன்-II
உபதலைவர்: K. M. காதர் மஸ்தான்
பொருளாளர்: P. M. பாரூக்
செயலாளர்: J. N. இன்பராஜ்

18 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

டால்மியாபுரம்
உபதலைவர்: M. P. யூசப்
பொருளாளர்: S. கோபாலன்
செயலாளர்: P. ஜான்
விளையாட்டு: M. பொன்னிமோஸஸ்

[illegible]0 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது

REG. No. M. 59..

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்காக் என்று திட்டமிட்டு நல்ல ஸ்வாரஸ்யமான கதைகளாகப் பொறுக்கிச் சேர்த்துச் சில புத்தகங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்தப் புத்தகங்களில் நிறையப் படங்களும் இருக்கின்றன. உங்கள் மனத்தைக் கவரும் கதைகள்; படங்கள்.

இப்போது தயாராக இருக்கும் புஸ்தகங்கள்:

1. **ராஜாவும் குருவியும்** "சோமசன்மா" அணா

   ராஜாவும் குருவியும், ஆமையும் முயலும், காளையும் நாயும், நாயும் நிழலும், பிராம் மணனும் பொன் காப்பும், நரியும் திராட்சையும், சுண்டெலியும் சிங்கமும் என்ற ஏழு கதைகளின் தொகுதி.
   இதே பெயரில் நீங்கள் படித்திருக்கும் பழைய கதைகளல்ல இவைகள். படித்துப் பாருங்கள்.

2. **கழுகும் கிளியும்** "சோமசன்மா" அணா

   கழுகும் கிளியும், ஏமாறாத காக்காய், நண்டும் கொக்கும், புலித்தோல் போர்த்த கழுதை, குரங்கும் ஆப்பும், காக்கையின் தாகம், கழுதையும் நாயும் என்ற ஏழு புதுக் கதைகளின் தொகுதி.

3. **தவளையும் காளையும்** "சோமசன்மா" அணா

   தவளையும் காளையும், நாவல் மரத்துக் குரங்கு, கூடா நட்பு, ஓநாயும் ஆட்டுக் குட்டியும், குரங்கு நியாயம் என்ற ஐந்து புதிய கதைகள்.

4. **கோழி விதைத்த நெல்** "சூடாமணி" அணா

   பாட்டாகப் பாடும் கதை.

5. **தங்கத்தின் பந்து** "சூடாமணி" அணா

   தங்கத்தின் பந்து, சண்டை போட்ட நாய்க்குட்டிகள், காட்டுப்பூனையும் குழந்தையும் என்ற மூன்று கதைகள்.

6. **என் பேர் என்ன?** "சூடாமணி" அணா

   பாட்டுக்கதை.

கண்ணன் அங்கத்தினர்களுக்கு $12\frac{1}{2}\%$ கமிஷன் உண்டு.